# நிர்வாக அறிக்கை
# 1995

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக அறிக்கை

# 1995

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


பக்கம்

1. அறிமுகம் 1

2. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் நோக்கங்களும் செயற்பாடுகளும். 2

2:1 அறிமுகம்

2:2 கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கங்கள்.

2:3 கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகள்.

3. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அமைப்பும் ஊழியர்களும் 3

3:1 அமைப்பு

3:2 ஊழியர்கள்

4. தேசிய கூட்டுறவு இயக்கத்தில் தாக்கம் புரியும் கொள்கைசார் நடவடிக்கைகள். 4

4:1 கூட்டுறவுச் சங்கங்களை மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்.

4:2 புதிய கூட்டுவுச் சங்க சட்டம்.

5. கூட்டுறவுச் சங்கங்களைப் புதிவு செய்தல். 5

6. மத்தியட்ச தீர்ப்பு விசாரணை. 6

7. விசாரணை நடவடிக்கைகள். 6

8. ஒழிப்புச் செயல்கள். 7

9. கூட்டுறவுச் சங்கங்களில் கணக்காய்வு. 7

10. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும். 7

10:1 கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் பயிற்சி.

10:2 கூட்டுறவு இயக்கத்திற்கான மனித வள அபிவிருத்தி பயிற்சி

10:3 விசேட பயிற்சிகள்.

10:4 பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியின் அபிவிருத்திச் செயல்கள்.

10:4:1 பயிற்சி நடவடிக்கைகள் அபிவிருத்தி.

10:4:2 பௌதீக வள அபிவிருத்தி.

10:5 விசேட குறிப்புக்கள்.

10:6 திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி நடவடிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிர்வாக அறிக்கை

## 01. அறிமுகம்

இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் அதன் வளர்ச்சிக்கும் கூட்டுறவுச் சட்டத்தினால் உரித்தளிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக 1995ம் ஆண்டில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினாலும் மாகாண சபைகளைச் சேர்ந்த கூட்டுறவு ஆணையாளர் அலுவலகங்களினாலும் பொதுவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாக விபரிப்பதே இவ்வறிக்கையின் நோக்காகும்.

இது தவிர கூட்டுறவுத் துறையானது 1995ல் தேசிய ரீதியில் எவ்வாறு செயற்பட்டுள்ளது என்பதனையும் சுருக்காகத் தரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கங்களும் செயற்பாடுகளும்

### 2.1 அறிமுகம்

அரசியலமைப்பு சட்ட ஏற்பாடுகளின்படி மாகாணங்களின் கூட்டுறவு சார்ந்த விடயங்கள் மாகாண சபைகளுக்கும் அகில இலங்கை ரீதியில் அங்கத்தவர் களைக் கொண்டிருப்பதும் தொழிற்பரப்பு எல்லைகளையுடையதுமான கூட்டுறவுச் சங்கங்களும் சமாசங்களும் உச்ச மட்ட கூட்டுறவு சங்க சமாசங்களும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கும் அவைகளின் அரசு சார் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பொறுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவுக் கொள்கை களுக்கும் தேசிய நலன்களுக்கும் உகந்த வகையில் இயக்குவதற்காக கூட்டுறவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாடு முழுக்க பரந்துள்ள கூட்டுறவு இயக்கத்துடன் அரசின் கூட்டுறவு சார்ந்த கொள்கைகளை தொடர்புபடுத்தும் இணைப்பு பணியினையும் கூட்டுறவுத் திணைக்களம் கொண்டுள்ளது. இத்தகையதொரு வரண் முறைக்குள் கூட்டுறவுத் திணைக்களத்தின் நோக்கங்களும் செயற்பாடுகளும் பரந்து பட்டவை என்பது மிகத் தெளிவு.

### 2.2 கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கங்கள்

அ) கூட்டுறவு இயக்கத்தினை அபிவிருத்தி செய்வதற்கும், விருத்தி செய்வதற் கும், பலப்படுத்துவதற்கும் பொது மக்களால் மேற்கொள்ளப்படும் முயற்சி களுக்கேற்ப செயற்படுவதும் ஆலோசனையளிப்பதும்.

ஆ) கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களிடையேயும் பொது மக்கள் மத்தியிலும் கூட்டுறவுக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பரப்புதல்.

இ) கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்திறனை அபிவிருத்தி செய்தல்.

ஈ) நாட்டின் அபிவிருத்தியில் கூட்டுறவு இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதனை உறுதிப்படுத்துதல்.

### 2.3. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகள்.

அ) கூட்டுறவு இயக்கத்திற்கான தேசிய கொள்கைகளை வகுப்பதும், கூட்டுறவு இயக்கம் பற்றி அரசு கொண்டிருக்கும் நிலைப்பாட்டினை செயற்படுத்தும் கருமங்களிலும் ஈடுபடுதல்.

ஆ) கூட்டுறவு விடயம் மாகாண சபைகளின் விடயமொன்றாக செயற்படுத்தும் போது அதனை தேசிய கொள்கை வட்டவரைக்குள் கொண்டு வருதல்.

இ) அகில இலங்கை ரீதியில் அங்கத்துவ அதிகார எல்லையாகக் கொண்டமை யும் ஆரம்ப, இரண்டாம், மூன்றாம் சங்கங்களைப் பதிவு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிப்பதும் சங்கங்களுக்குத் தேவையான ஆலோசனைச் சேவைகளை வழங்குவதும்.

உ. கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திச் செயல்களையும் கணக்காய்வு கடமைகளையும் தேசிய தரத்தில் நடைமுறைப்படுத்துதல்.

ஊ. பொருட்காட்சி பயிற்சி வகுப்புக்கள், பிரச்சாரக் கூட்டங்கள் போன்றவை நடத்துதல்.

எ. பிணக்குத் தீர்வு, விசாரணை நடத்தல், கூட்டுறவுச் சங்கங்களைப் பரிசீலித்தல், பதிவழிக்கப்பட்ட சங்கங்களையும் சமாசங்களையும் குலைத்தல் போன்ற சட்டரீதியான கருமங்களில் ஈடுபடல்.

ஏ. அபிவிருத்திச் செயற்பாடுகளில் தொடர்புறும் அமைச்சுக்களுடன் நெருங்கிச் செயற்படுதலும், அத்தகைய அமைச்சுக்களுக்கு கூட்டுறவு நிர்வாகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தலும்.

ஐ. கூட்டுறவு இயக்கத்திற்கு தேவையான மனித வள பயிற்சிகளை அளிப்பதும் அதனை அபிவிருத்தி செய்வதும்.

ஒ. கூட்டுறவுச் சங்க அபிவிருத்திக்காக நிதிகளை நடைமுறைப்படுத்தல்.

## 3 கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அமைப்பும் ஊழியர்கள்

### 3.1 அமைப்பு

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருமானவரின் மேற்பார்வையில் கொழும்பு தலைமைக் காரியாலயமும் பொல்கொல்லைக் கூட்டுறவுக் கல்லூரியும் செயற்படுகின்றது. மாகாண கூட்டுறவுச் செயற்பாடுகள் அந்தந்த மாகாணங்களின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் / பதிவாளர்களினால் சுயமாக மேற்கொள்ளப்படுவதுடன் திணைக்கள ஆணையாளருடன் இணைந்து சுமுக உறவுடனும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கூட்டுறவு திணைக்களத்தின் செயற்பாடுகளின் அமைப்பு பின்வருமாறு.

1. விவசாய அபிவிருத்தி நிர்வாக பிரிவு
2. வங்கி நடவடிக்கைகள், சட்டம். கணக்காய்வு பிரிவு
3. வியாபார, வர்த்தக. கைத்தொழில், முகாமை பிரிவு
4. நிதி பிரிவு
5. கல்வி மனித வள அபிவிருத்தி பிரிவு

ஆணையாளருக்கு நேரடிப் பொறுப்புக் கூறும் கணக்காளர் நிதிப் பிரிவின் தலைவராக செயற்படுவதுடன், சிரேஷ்ட உதவி ஆணையாளரொருவர் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வள அபிவிருத்திப் பிரிவிற்குப் பொறுப்பாயிருக்கிறார். ஏனைய மூன்று பிரிவுகளுக்கும் ஆணையாளருக்கு நேரடிப் பொறுப்புக் கூறும் மூன்று பிரதி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திணைக்களத்தின் அமைப்பு முறை இணைப்பு 1இல் காட்டப்படுகின்றது

(45ம் பக்கம் பார்க்க)

**3:2 ஊழியர்கள்**

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஊழியர்களினதும் மாகாண சபைகளின் கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான அலுவலக ஊழியர்களினதும் பட்டியல் இணைப்பு 2ல் காணப்படுகிறது.

(46ம் பக்கம் பார்க்க)

## 4. தேசிய கூட்டுறவு இயக்கத்தில் தாக்கம் புரியும் கொள்கைசார் நடவடிக்கைகள்

**4:1 கூட்டுறவுச் சங்கங்களை மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்.**

இலங்கையில் சில்லறை மொத்த விற்பனைத் துறையில் குறிப்பிடத்தக்கதொரு இடத்தினை கூட்டுறவுத் துறை பெறுகின்றது. வெறுமனே இலாப நோக்குடைய தாயிராமல் மக்களுக்கு வெகு அண்மையில் சென்று பொருட்களை விநியோகிக்கும் சேவையினை கூட்டுறவுத் துறை மேற்கொண்டுள்ளது. போட்டிச் சந்தையில் காணப்படும் நன்மைகளை தனியார் துறையினரைப் போன்று அனுபவிக்காது சேவையொன்றையே பிரதான நோக்காகக் கொண்டு செயற்படுவது கூட்டுறவு இயக்கமாகும். எனவே இதனடிப்படையில் மொத்த விற்பனை விரியிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களை விடுவித்தல் வேண்டும் என்ற கோரிக்கை பல தடவைகளில் முன் வைக்கப்பட்டிருந்தது. 1995இல் இது தொடர்பாக அரசு கவனம் செலுத்தி அவ்வரியிலிருந்து சங்கங்களை விடுவித்தமை மிகப்பெரும் வெற்றியாகும்.

இதனடிப்படையில் அரசு 1995 நவம்பர் 17ஆம் திகதியிலிருந்து செயற்படும் விதமாக புரள்வு வரியிலிருந்து சங்கங்களை விடுவித்திருந்தது. 1995 இலக்கம் 25 என்ற மாகாண சபைகள் விற்பனைச் சுழற்சி வரிச் (எல்லைகளும் விடுவிப்புக்களும்) சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனால் எதிர் காலத்தில் குறிப்பிடத்தக்கதொரு தொகையினை கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தமாக்கிக் கொள்ளும்.

**4.2 புதிய கூட்டுறவுச் சங்கச் சட்டம்**

காலத்திற்குப் பொருத்தமானதும் கூட்டுறவு இயக்கத்தினை புதிய பாதையில் இட்டுச் செல்லக் கூடியதுமான 1983 இலக்கம் 32ஆம், 1992 இலக்கம் 11ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கூட்டுறவுச் (திருத்தம்) சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972ஆம் ஆண்டு இலக்கம் 05 என்ற கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்குப் பதிலாக புதிய கூட்டுறவுச் சட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல் தேசியத் தேவையொன்றாகும் என்பது திணைக்களத்தின் கருத்தாக இருந்தது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் படி மாகாண சபைகளின் விடயமாக கூட்டுறவு கொண்டுவரப்பட்டதால் அனைத்து மாகாண சபைகளின் கூட்டுறவுத் துறையின் தலைவர்களினதும், அதிகாரிகளினதும் அமைப்பொன்றிற் குள் புதிய கூட்டுறவுச் சட்டமொன்றின் மூலப் பிரதியொன்றைத் தயார்படுத்தியிருப் பது இவ்வருடத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வொன்றாகும். இச்சட்டத்தின் மூலப்பிரதி வெளியீட்டு தயாரிப்பின் போது பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரி மாறலாக இரு விவாத மேடைகள் நடத்தப்பட்டன.

## 5. கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல்

அகில இலங்கை கூட்டுறவுச் சங்கங்களையும் சமாசங்களையும் பதிவு செய்யும் பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு தரப்பட்டிருப்பதுடன் 1995ஆம் வருடத்தில் அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதற்காக எத்தகைய கோரிக்கைகளும் கிடைத்திருக்கவில்லை. மாகாணங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல் அம்மாகாண கூட்டுறவு ஆணையாளர்க ளின் கடமையாகும். அதன்படி 1995ஆம் ஆண்டில் பின்வரும் வகையில் மாகாண சபைகள் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்துள்ளன.

புள்ளிவிபர இணைப்பு இலக்கம் :1

**1995ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள்**

| மாகாண சபைகள் | | | பதிவு பெற்ற சங்கங்கள் |
|---|---|---|---|
| மேல் | மாகாண | சபை | 40 |
| மத்திய | " | " | 13 |
| தெற்கு | " | " | 59 |
| வடகிழக்கு | " | " | 194 |
| வடமேல் | " | " | 81 |
| வடமத்தி | " | " | 08 |
| ஊவா | " | | 59 |
| சபரமுவ | " | | 17 |
| | | | 471 |

(மேலதிக விபரங்களுக்கு இணைப்பு இலக்கம் 3ஐ 47ம் பக்கத்தில் பார்க்கவும்)

இலங்கையில் 1995ம் ஆண்டில் செயல்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மொத்தத் தொகை பற்றிய விபரங்கள் சங்க வகைப்படி இணைப்பு 4 இல் தரப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. மத்தியட்ச தீர்ப்பு விசாரணை

கூட்டுறவு சட்டத்தினால் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு வழங்கப் பட்டுள்ள சட்ட ரீதியான கருமங்களில் கூட்டுறவு சங்கத்திற்கும் அங்கத்தவர்கள்/ பணியாளர்களுக்குமிடையே தோன்றுகின்ற பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் மிக முக்கிய கடமையொன்றாகும். தலைமைக் காரியாலயத்தினால் மேற்பார்வை செய்யப்படும் கூட்டுறவுச்சங்கங்களின் பிணக்குத் தீர்வு தொடர்பாக திணைக்களத் தின் ஆணையாளர் செயற்படுவார் என்பதுடன் ஒவ்வொரு மாகாண சபைகளின் கீழ் செயற்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்களில் எழுகின்ற பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் அவ்வம் மாகாண ஆணையாளர்களின் கடமையாகும். 1995ஆம் வருடத்தில் பிணக்குத் தீர்வு தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தி னதும் ஒவ்வொரு மாகாணசபைகளினதும் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் இதன் கீழ் தரப்படுகின்றது.

புள்ளிவிபர அட்டவணை 2

**மத்தியட்ச தீர்ப்பு விசாரணை**

| | தலைமைக் காரியாலயம் | மாகாண அலுவலகங்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மேல் | மத்திய | தெற்கு | வட/கிழ | வ/மே | ஊவா | வ /மத் | ச.கமுவ | மொத்தம் |
| ஆற்றுப்படுத்தப் பட்ட பிணக்குகள் | 142 | 893 | 132 | 1025 | 38 | 917 | 400 | 629 | 642 | 4818 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட பிணக்குகள் | 94 | 883 | 173 | 971 | 24 | 522 | 402 | 572 | 599 | 4240 |

## 7. விசாரணை நடவடிக்கை

கூட்டுறவுச் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களில் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரம் ஆணையாளருக்கு உரித்தாகியிருப்பதுடன் இவ்வருடத்தில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் எவ்வித 46(1) விசாரணைகளும் நடத்தப்பட்டிருக்கவில்லை. இதில் விசாரணைகள் அவசியம் நடத்தப்பட்டாக வேண்டும் என்ற சந்தர்ப்பங்கள் நீங்கலாக கூட்டுறவுச் சட்டத்தின் விசாரணை செய்யும் ஏற்பாட்டினைக் கடைப்பிடிப்பதில்லை என்ற கொள்கைசார் அடிப்படையில் திணைக்களம் செயற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிவிபர அட்டவணை 3

**கூட்டுறவுச் சங்கங்களின் 46(1) பிரிவின் விசாரணை நடவடிக்கைகள் - 1995**

| தலைமைக் காரியாலயம் | மேல் | மத்திய | தெற்கு | வட/கிழ | வ/மே | ஊவா | வ /மத் | ச.கமுவ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல்லை | 3 | 7 | 5 | 7 | 8 | 3 | 2 | 7 | 42 |

## 8. ஒழிப்பு கருமங்கள்

கூட்டுறவுச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிகளின் படி பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைச் சரியீடு செய்ததன் பின்னர் சங்கங்களை ஒழிப்புச் செய்யும் அதிகாரம் திணைக்களத்தின் ஆணையாளருக்கும் மாகாண ஆணையாளருக்கும் அளிக்கப்பட்டுள்ளது. ஒழிப்புக் கருமங்களில் அதி கமாக சொத்துக்களை திரவத்தன்மைக்குட்படுத்துவதும் பொறுப்புக்களை நிறை வேற்றி முடிப்பதும் சிரமமான காரியங்களாக இருப்பதால் நீண்ட காலங்கள் செயற்பட வேண்டியுள்ளது. இதனால் ஒரு சங்கத்தின் ஒழிப்புச் செயல்களை ஒரு வருடத்தையும் தாண்டி விடுகின்றது. இதன்படி பின்வரும் அட்டவணையில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்தும் ஒவ்வொரு மாகாண ஆணை யாளர்களினாலும் சங்கங்களை ஒழிப்புச் செய்த விபரங்கள் காண்பிக்கப்படுகிறது.

புள்ளி விபர அட்டடவணை 4

**ஒழிப்புக் கருமங்கள்**

| | தலைமைக் காரியா லயம் | மாகாண அலுவலகங்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மேல் | மத்திய | தெற்கு | வட/கிழ | வ/மே | ஊவா | வ /மத் | ச.கமுவ | மொத்தம் |
| செய்யப்பட்ட ஒழிப்புக்கள் | - | - | 12 | 20 | - | 03 | - | - | - | 35 |
| நடைபெற்று வரும் ஒழிப்புச் சங்கங்கள் | - | 17 | 30 | 104 | 276 | 55 | 20 | 55 | 75 | 632 |

## 9. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு

இலங்கையினை அதிகாரப் பிரதேசமாகக் கொண்டியங்கும் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களினதும் உச்சமட்ட கூட்டுறவு சங்கங்களினதும் கணக்காய்வுக் கடமை கள் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தைச் சார்ந்ததாகும். அதே போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாகாணங்களிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களைக் கணக்காய்வு செய்யும் பொறுப்பு, அந்தந்த மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் களைச் சேர்ந்ததாகும். சங்கங்களின் கணக்காய்வுகளை கூட்டுறவுத் திணைக்க ளமும், மாகாண சபைகளும் எவ்வித கட்டணங்களுமின்றி சங்கங்களுக்கு செய்து கொடுத்து வருகின்றன. இது குறிப்பிடத்தக்கதொரு சேவையொன்றாகும். கணக் காய்விற்கு அனுபவமும் தேர்ச்சியும் வாய்ந்த அதிகாரிகளை ஈடுபடுத்த வேண் டியுள்ளது. தற்போது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திடமும் மாகாண சபைகளிடமும் கணக்காய்விற்காக போதியளவு அதிகாரிகள் இல்லாதிருப்பினும் 1995ஆம் வருடத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்விற்காக முழு முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

1995ஆம் ஆண்டில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினாலும் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களினாலும் செயற்படுத்தப்பட்ட கணக்காய்வு வேலைகளின் விபரம் இதன் கீழ் காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டணை 5

**கணக்காய்வுக் கருமங்கள்**

| | கூ. அ. திணைக் களம் | மேல் | மத்திய | தெற்கு | வட/கிழ | வ/மே | ஊவா | வ/மத் | ச.கமுவ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணக்காய்வின் இலக்கு | 85 | 2911 | 1288 | 1570 | 602 | 1577 | 938 | 893 | 926 | 102 |
| கணக்காய்வு செய்யப்பட்ட தொகை | 32 | 1048 | 958 | 1290 | 364 | 939 | 715 | 476 | 728 | 6518 |
| முன்னேற்றம் நூற்றுவீதம் | 38% | 36% | 74% | 82% | 64% | 59% | 76% | 53.6 | 79% | 61% |

## 10. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்

கூட்டுறவுத் திணைக்களத்தினதும் மாகாண சபைகளினதும் கூட்டுறவுத் துறை யில் ஈடுபட்டுள்ள அரச அதிகாரிகளுக்கும், கூட்டுறவு இயக்கத்திற்கு தேவையான மனித வள அபிவிருத்தியில் பதவி நிலை தரத்திலும் அதனைவிட உயர் தர நிலைக்கும் மனித வள அபிவிருத்தியில் பயிற்சி அளிக்கும் பொறுப்பு தேசிய மட்டத்தில் பொல்கொல்லை கூட்டுறவு கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது. பொல் கொல்லை கூட்டுறவுக் கல்லூரி 1995ஆம் ஆண்டில் தனது நோக்கத்தினை அடைந்து கொள்ள அனேக விடயங்களை நிறைவேற்றியுள்ளது.

பயிற்சி அளிப்பதிலும் கூட்டுறவின் தேசிய பயிற்சி நிறுவனமொன்றாக எதிர் காலத்தில் கூட்டுறவு கல்லூரியினை அமர்த்திக் கொள்வதற்கான மீளாய்வு செயற்பாடுகளிலும் கூட்டுறவு கல்லூரியின் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற் காகவும் இவ்வருடத்தில் அனேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10:1 கூட்டுறவு சங்கப் பரிசோதகர் பயிற்சி

கூட்டுறவு சங்கப் பரிசோதகர் தரம் II ஐச் சேர்ந்த இரு குழுக்களுக்கு இவ் வருடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டிருந்ததுடன், 1994ஆம் வருடத்தில் ஆரம்பித்து 1995 ஏப்ரலில் முடிவுற்று, 34 கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்களைக் கொண்ட பயிற்சித் திட்டமொன்று புதிதாக நியமனம் பெற்ற 26 கூட்டுறவுச் சங்கப் பரி சோதகர்களுக்கும் இவ்வருடத்தில் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. மேலும் மாகாண சபைகளுக்காக புதிதாக நியமனம் பெற்ற 54 கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்களுக் காக இவ்வாண்டில் பயிற்சியளிக்கப்பட்டது.

இது தவிர நிகழ்காலத் தேவை கருதி கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு விசேட பயிற்சியளிக்கும் 9 திட்டங்களும் செயற்படுத்தப்பட்டது. அதற்காக 334 பேர் பங்கேற்றிருந்தனர். இப்பயிற்சியில் கணக்காய்வுத் தேர்ச்சி, மத்தியட்ச விசாரணை, கணக்காய்வுச் சோதனை, கூட்டுறவுத் துறையின் புதிய போக்குகள் போன்றவை களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## 10:2 கூட்டுறவு இயக்கத்திற்கான மனித வள அபிவிருத்தி பயிற்சி

இவ்வருடத்தில் கூட்டுறவு இயக்கத்தின் அங்கத்துவ தலைமைத்துவம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கான விசேடமாக தயாரிக்கப்பட்ட விசேட பயிற்சித் திட்டம் 28 நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதில் 847 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

## 10:3 விசேட பயிற்சிகள்

மேற்குறித்த 10:1, 10:2 பயிற்சிகள் தவிர பின்வரும் பயிற்சித் திட்டங்கள் 1995ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை புனருத்தாபனம் செய்தல் என்ற வேலைத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு முகாமை நிறுவனம் தெரிவு செய்த முகாமைப் பயிற்சியாளர்கள் 39 பேருக்காக 15 நாள் கொண்ட விசேட பயிற்சித் திட்டம்.

2. இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைக்காக புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட விரிவுரையாளர்களுக்கும் பயிற்சியாளர்கள் 20 பேருக்கும் 10 நாள் கொண்ட விசேட பயிற்சி வேலைத் திட்டம்.

3. தோட்டப்புற வீடமைப்பு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் 42 பேருக்கு கணக்குவைப்பு, செயலாளர் கடமை, கூட்டுறவு பற்றியதில் 3 நாள் கொண்ட விசேட பயிற்சித் திட்டம்.

4. இலங்கையின் கல்வித்துறையில் கூட்டுறவு பற்றிய விடயத்தை அறி முகப்படுத்தும் நோக்கமாக கல்வியமைச்சின் வர்த்தகக் கல்விக்குப் பொறுப்பான பிரதி / உதவி கல்வி பணிப்பாளர்கள் 40 பேர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக ஆசிரிய ஆலோசகர் 40 பேர்களுக்கும் 2 நாட்கள் வீதமான விசேட பயிற்சித் திட்டங்கள்.

5. பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்குழு உறுப்பினர்களாக பதவி வகிக்கும் 50 மாணவர்களுக்கு பாடசாலைக் கூட்டுறவு சம்பந்தமான தும், கூட்டுறவுத் தலைமைத்துவம் பற்றியதுமான 2 நாள் விசேட பயிற்சித் திட்டம்.

**10:4 பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாடுகள்**

10:4:1 பயிற்சி நடவடிக்கைகள் அபிவிருத்தி

கூட்டுறவு இயக்கத்தின் எதிர்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப கூட்டுறவு பயிற்சி முறையினை மாற்றியமைக்கும் செயலமர்வுகள்1995 ஒக்டோபர் 13ஆம் 14ஆம் திகதிகளில் இடம்பெற்று பயனுள்ள விதிப்புரைகளடங்கிய ஆலோசனைகள் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் அதனை சர்வதேச தொழிலாளர் ஒன்றியத்தின் உதவியு டன் எதிர்காலத்தில் அமுல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மேலும் நிகழ்கால தேசிய போக்குகளுக்கமைய கூட்டுறவுத்துறையின் மனித வள அபிவிருத்திக்கான வழிமுறையில் பிரவேசிக்கச் செய்யும் வகையில் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை, இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம், மாகாண ஆணையாளர்கள் அலுவலகங்கள் ஒன்றிணைந்து வேலைத் திட்டங் களை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

10:4:2 பௌதீக வள அபிவிருத்தி

இவ்வுரிய காலத்தில் கூட்டுறவுக் கல்லூரியின் பௌதீக வள அபிவிருத்திக்காக விசேட வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா 11 லட் சம் வரை செலவிடப்பட்டு கல்லூரியின் விடுதிகளையும், மலசலகூடங்களையும் நவீனப்படுத்தியிருப்பதுடன் ரூபா 8 லட்சம் செலவிடப்பட்டு நீர் வசதிகளுக்காக குழாய் கிணறும் அமைக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும்.

இக்குழாய் கிணற்றின் உதவியினால் தற்போது நீர் வரியாக மாதாந்தம் செலுத் தப்படும் ரூபா 40,000/= மீதமாவதுடன் அது அரசின் செலவினைக் குறைத்துக் கொள்ளும் முயற்சியொன்றுமாகத் தோன்றுகின்றது. இக்காலத்தில் கட்டடம், உபகரணம், புதுப்பித்தல்களுக்காகவும் நிர்வாகச் செலவுகளுக்காகவும் ரூபா 412706.35 செலவிடப்பட்டிருப்பதுடன் ரூபா 317853/= செலவிடப்பட்டு அத்தியவசிய தேவையான உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

**10:5 விசேட குறிப்புகள்**

இக்காலத்தில் இடம் பெற்ற விடயங்களில் குறிப்பிடத்தக்க அம்சமாக கல்லூரி யின் அதிபராக 7 வருடங்கள் கடமையாற்றிய திருமதி.ஜே.சி. பு. புளுமுல்லை அவர்கள் இடமாற்றம் பெற்றதும், திணைக்களத்தில் நீண்ட காலம் கடமையாற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.நிர்.சே.II (1) தர அதிகாரியான உதய ரஞ்சித் செனவிரத்ன அவர்கள் கல்லூரி யின் புதிய அதிபராக பொறுப்பு ஏற்றதும் மிக முக்கிய அம்சமாகும். கூட்டுறவுக் கல்லூரி அதிபராக 7 வருடங்கள் கடமைபுரிந்த திருமதி புளுமுல்லை அவர்களின் சேவை பாராட்டப்படவேண்டியதே.

**10:6 திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி நடவடிக்கைகள்**

பயிற்சி நடவடிக்கைகளுக்கென மக்கள் வங்கி தனது கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலி ருந்து வழங்கிய உதவியைக் கொண்டு 1995இல் திணைக்களத்தின் செயற்பாட்டு பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரம் பின்வருமாறு.

புள்ளி விபர அட்டவணை 6

**திணைக்களத்தின் செயற்பாட்டும் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சிப்பாட நெறிகள் 1995**

| பிரிவு | பாடநெறிகளின் தன்மை | பாட நெறிகளின் தொகை | பங்கு பற்றி-யோர்கள் |
|---|---|---|---|
| கிராமிய வங்கிப் பிரிவு | வங்கிச் சேவை முகாமையாளர்களைப் பயிற்றுவித்தல் | 04 | 137 |
| | வெளிக்கள உத்தியோகத்தர் பயிற்சி | 02 | 70 |
| | வெளிக்கள கணக்காய்வு பயிற்சி | 02 | 41 |
| கல்வி | மாவட்ட சமாசம் | 02 | 70 |
| மனித வள பிரிவு | திணைக்கள எழுது வினைஞர் பயிற்சி | 01 | 33 |
| | திணைக்கள காரி.சேவகர் பயிற்சி | 01 | 37 |
| முகாமை/ வர்த்தக பிரிவு | விற்பனை அபிவிருத்தி செயல் மரபு | 02 | 85 |
| விவசாய அபிவிருத்தி பிரிவு | சுத்தமான போஷாக்கான அரிசி உற்பத்தி திட்டம் | 23 | 994 |
| | விதைநெல் உற்பத்தி திட்டம் பற்றிய அறிவூட்டல் | 08 | 171 |
| | பெரிய வெங்காயக் கொள்வனவு செயற்பாடு பற்றிய அறிவூட்டல் | 04 | 390 |
| | பால் விற்பனைச்சாலை நிறுவு தல் பற்றிய பயிற்சி | 02 | 75 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. மாகாண கூட்டுறவுகல்வி விரிவாக்கச் செயல்கள்

கூட்டுறவுத் துறையினை மாகாண சபைகளின் பொறுப்பில் விடப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு மாகாண சபைகளின் மாகாண ஆணையாளர்களின் மேற்பார் வையின் கீழ் செயற்படும் கூட்டுறவுச் சங்கங்களினதும் மாகாண கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளர் அலுவலகங்களினாலும் பல்வேறு பயிற்சி வேலைத் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. விசேடமாக திணைக்கள அதிகாரிகள் பயிற்சி யளித்தல், கூட்டுறவு அங்கத்தவர் பயிற்சி வேலைத் திட்டம், கூட்டுறவு சங்கப் பணியாளர் பயிற்சி வேலைத் திட்டம் என அனேக திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வேலைத் திட்டங்களில் அனேகமானவை 01-05 நாட் கள் காலப்பகுதியைக் கொண்டிருந்ததாகும். ஒவ்வொரு மாகாண சபைகளினாலும் நடாத்தப்பட்ட கல்வி விரிவாக்க நடவடிக்கைகளின் கீழ் 1995ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பயிற்சிகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

புள்ளி விபர அட்டவணை —7

**கல்வி பயிற்சி விரிவாக்கச் செயல்கள் - பயிற்சி வேலைத் திட்டங்கள்**

**1995**

| | மாகாண அலுவலகங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மேல் | மத்திய | தெற்கு | வட/கிழ | வ/மே | ஊவா | வ /மத் | ச.கமுவ |
| அங்கத்தவர் பயிற்சி வேலைத் திட்டம் | 309 | 341 | 378 | 65 | 903 | 101 | 285 | 1557 |
| திணைக்கள அதிகாரிகளின் பயிற்சி வேலைத் திட்டம் | 16 | 16 | 11 | - | 14 | 01 | 08 | 42 |
| வேறு வேலைத் திட்டம் | 241 | 16 | 188 | 1 | 749 | 111 | 233 | 667 |

## 12. தகவற் புள்ளிவிபரச் சேவைப் பிரிவு

ஒவ்வொரு மாகாணங்களிலும் இடம்பெறும் கூட்டுறவு நடவடிக்கைகள் பற்றியும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நடவடிக்கைகள் பற்றியும் தொடர்பு படுத்தி தேசிய கூட்டுறவு இயக்கத்திற்குரிய தகவல்களையும், புள்ளி விபரங்களை யும் சேகரித்தல், பாதுகாத்தல், வெளியிடுதல் திணைக்களத்தின் முக்கிய கடமை யொன்றாகும். அவ்விபரங்கள் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பெறுகின்றன.

மேலும் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் "கூட்டுறவு தகவற்கூறு" கூட்டுறவுத்துறை சம்பந்தமான கல்வியைத் தொடர்பவர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாய் அமையப்பெற்றுள்ளது. இத்தகவற்கூறில் உள்நாட்டு வெளிநாட்டு வெளியீடுகள் 1600 சேகரம் செய்யப்பட்டுள்ளது.

## 13. விவசாய அபிவிருத்தி

நாட்டினது விவசாய அபிவிருத்தியில் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு விதமான பங்களிப்புக்களைச் செய்து வருகின்றன. அவைகள் மாகாண கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றது. அவ்வாறிருப்பினும் விவசாயத்தின் அபிவிருத்திக்காக விசேட திட்டங்கள் அறி முகப்படுத்தல், இயக்குதல், போன்ற நடவடிக்கைகள் மாகாண ஆணையாளர் களின் மேற்பார்வையின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களூடாகச் செயற்படுத்த கூட்டுறவுத் திணைக்களத்தின் விவசாயப்பிரிவு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. முன்சென்ற சில வருடங்களின்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அவ்வா றான திட்டங்கள் 1995இலும் வெற்றிகரமாக செயற்பட்டுக் கொண்டிருந்தன.

### 1. சுத்தமான போசாக்குள்ள அரிசி உற்பத்தி திட்டம்

1995இல் 89 கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 1005 அரிசி உற்பத்தி கிராமங் களில் இத்திட்டம் செயற்பட்டிருந்தது. 7292 திட்டம் பெறுநர்கள் இத்திட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 17149 மெற்றிக் தொன் அரிசி விற்பனை செய்யப்பட்டிருந்தது. அச்சங்கங்கள் 246.20 மில்லியன் ரூபாவினை அவர்களுக்கு அதற்காக வழங்கியிருந்தது. 1995ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் இணைப்பு 5இல் 49ம் பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பெறுநர்களால் 1995இல் 109 சிறிய அரிசி ஆலைகள் அவர்க ளின் வீட்டில் வைத்தே தொழிற்படச் செய்ய முடிந்தது.

### 2. அரிசி மா உற்பத்தி திட்டம்

இத்திட்டத்தினை வரையறுக்கப்பட்ட அறநாயகா பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் செயற்படுத்தி வருகின்றது. வ/பட்ட திஸ்ஸமகராம கிராம ப.நே.கூ.சங்கமும் இத்திட்டத்தி னைச் செயற்படுத்தியிருந்ததுடன் தற்போது அத்திட்டத்தினை அது தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. தொழிலற்ற 102 பெண்கள் இத்திட்டத்தில் உள்ளார் கள். அவர்களுக்காக செலுத்தப்பட்ட சம்பள அளவு 1.1 மில்லியன் ரூபாவாகும்.

1995ஆம் ஆண்டில் அத்திட்டச் செயற்பாடு பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| உற்பத்தி செய்யப்பட்ட மா | கிலோ | 70654 |
| உள்நாட்டு விற்பனை | கிலோ | 31309 |
| வெளிநாட்டு விற்பனை | கிலோ | 39345 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. விதைநெல் உற்பத்தி திட்டம்

விவசாய திணைக்களத்தின் விளைவுப் பெருக்கத்திட்டப் பிரிவினதும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் இயக்குதலுடனும் இத்திட்டம் திணைக்களத்தின் விவ சாயப் பிரிவினால் 1993ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதுடன் உயர் தரத்தில் விதை நெல்லினை உற்பத்தி செய்யவும் முடிந்துள்ளது. தற்போது 7 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

உற்பத்திகளின் விபரம் பின்வருமாறு :—

| சங்கத்தின் பெயர் | திட்டத்திலுள்ள விவசாயிகள் | பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் | உற்பத்தி செய்யப் பட்ட விதைநெல் அளவு (மெ.தொன்) |
|---|---|---|---|
| வ/ப/திபுலாகல ப.நோ.கூ.சங்கம் | 90 | 310.0 | 363.0 |
| வ/ப/பளுகஸ்தமன " " | 100 | 658.0 | 722.0 |
| வ/ப/ஹுங்கம " " | 115 | 298.0 | 267.0 |
| வ/ப/நிகவெரடிய " " | 21 | 47.0 | 26.0 |
| வ/ப/பொல்பிதிகம " " | 14 | 20.0 | 10.0 |
| வ/ப/கல்நாவ " " | 11 | 17.5 | 31.5 |
| வ/ப/நா உல " " | 20 | 10.0 | 7.5 |
| | 371 | 1360.5 | 1427.0 |

### 13.2 புதிய திட்டங்கள்

13:2:1 தேசிய பெரிய வெங்காய விதை உற்பத்தித் திட்டம் :-

நாட்டில் பெரிய வெங்காய விவசாயச் செய்கையின் போது விவசாயிகள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினையான சிறந்த தர விதை வெங்காயப் பிரச்சினைக்கொரு தீர்வாக மத்திய மாகாண சபையின் அனுசரணையுடன் தேசிய பெரிய வெங்காய விதை உற்பத்தித் திட்டமொன்றை இவ்வருடத்தில் அறிமுகப்படுத்தியிருப்பது விசேட அம்பமாகும். இதற்காக வ/பட்ட றங்கிரி தம்புள்ளை ப.நோ. கூ. சங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன்படி திட்டத்துடன் தொடர்புபடும் நிறுவனத்தினால் ரூபா 225,000/= நிதியுதவியும், தேவையான தொழில் நுட்ப உதவியும் அளிக்கப்பட்டுள்ளது. 1995ஆம் ஆண்டில் வ/பட்ட றங்கிரி தம்புள்ளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்துள்ள 88 விவசாயிகள் தேசிய பெரிய வெங்காய விதை 210 கிலோவினை உற்பத்தி செய்திருப்பதுடன் அதன் பெறுமதி ரூபா 42 லட்சம் அளவானதாகும். 1996இல் இவ்விதையினை பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 13:2:2 பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய் கொள்வனவு செய்யும் விசேட திட்டம்

ச.தொ.ச நிறுவனத்துடன் இணைந்து பெரிய வெங்காயமும், செத்தல் மிளகாயும் கொள்வனவு செய்யும் திட்டம் தொடங்கப்பட்டிருப்பதுடன் இதில் மத்திய மாகாணத்திலும், வடமத்திய மாகாணத்திலும் உள்ள 24 கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தப்பட்டுள்ளது. 1995ஆம் வருடத்தில் இத்திட்டத்தின் கீழ் ஏற்புடைய கூட்டுறவுச் சங்கங்களினால் 23.7 பத்துலட்சம் ரூபா பெறுமதியான 1479 மெட்றிக் தொன் பெரிய வெங்காயமும் 27.9 பத்துலட்சம் ரூபா பெறுமதியான 290 மெட்றிக் தொன் செத்தல் மிளகாயும், விவாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக 4 பயிற்சி கருத்தரங்குகள் நடத்தப்பட்டு 390 பேர் அதில் பங்குபற்றியிருந்தனர்.

### 13:3 கொள்வனவு நிலையங்கள்

1995ஆம் ஆண்டிற்கு முன்னர் தொடங்கப்பட்ட கொள்வனவு நிலையத் திட்டத்தின் கீழ்1994இல் 375.4 மில்லியன் ரூபா பெறுமதியுடைய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இவ்வருடத்தில் 672.7 மில்லியன் ரூபா பெறுமதியுடைய பொருட்களை கொள்வனவு செய்யமுடிந்தது. இப்பொருட்களில் நெல், அரிசி, மிளகாய், பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், பயறு, சோயா, பழவகை, மரக்கறி, உருளைக்கிழங்கு, தேயிலை, இறப்பர் என்பன அடங்கும். 1995ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களின் மொத்த அளவு 48719 மெட்றிக் தொன்னாகும்.

### 13:4 சிறு தென்னந்தோட்ட உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

இலங்கையில் தொன்றுதொட்டு செய்கைபண்ணப்பட்டு வரும் தெங்கு உற்பத்தி தொடர்பாக விசேட அபிவிருத்தி திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றது. 1995ஆம் ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையுடன் இணைந்து 47 சிறு தென்னந்தோட்ட உரிமையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டதுடன் இவை அனைத்தும் மாகாண ஆணையாளர்களினால் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. அவைகளின் அங்கத்தவர் தொகை 3833 ஆகும். இத்திட்டக் கருத்தரங்கு 8 நடத்தப்பட்டு அதில் 505 பேர் பங்கு பற்றியிருந்தனர்.

### 13:5 கூட்டுறவினால் பால் விற்பனைச் சாலைகள் நிறுவுதல்

நுகர்ச்சியாளர்களான மக்களுக்குப் போஷாக்கான உணவினை நியாய விலையில், பாலினையும் பாலோடு இணைந்த உற்பத்திப் பொருட்களையும் விநியோகிப்பதற்கும், பாலுற்பத்தியிலீடுபட்டுள்ளவர்களுக்கு சிறந்த விலையினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் கூட்டுறவு, மாகாண சபைகள், உள்ளூராட்சி, தேசிய வைத்திய அமைச்சின் வழிநடத்துதலின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இத்திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ்,

கொழும்பு நகரத்தில் பால் விற்பனைச் சாலைகளைத் திறக்க இவ்வருடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத் திட்டங்கள் வகுக்கப்பட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கான இரு பயிற்சிக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டிருந்தது. அதில் 75 பேர் பங்குபற்றியிருந்தனர்.

### 13.6 விதை உருளைக்கிழங்க இறக்குமதி

கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்துள்ள உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினையான விதை உருளைக்கிழங்கு தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் பொருட்டு வ/பட்ட இலங்கை சந்தைப்படுத்தற் சமாசமும், வ/பட்ட உடபலாத பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும் விதை உருளைக் கிழங்கினை இறக்குமதி செய்தது. இக்கிழங்கு விதைகள் மலிவு விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. 2484 மெட்றிக்தொன் விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டதுடன் அதன் மதிப்பு 106.6 மில்லியன் ரூபாக்க ளாகும். விதை உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யும் பொருட்டு கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலிருந்தும் விவசாய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நிதியிலிருந்தும் உரிய நிறுவனங்களுக்கு நிதி வசதியளிக்கப்பட்டது.

### 13.7 தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திலிருந்து கடன் வசதியளித்தல்

தேசிய அபிவிருத்தி நிதியில் பங்காளியாக இத்திணைக்களம் செயற்பட்டு பிரதான விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான நிதி வசதியினை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வருடம் | சங்கத் தொகை | கொடுக்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூபா லட்சம் |
|---|---|---|
| 1994 | 20 | 286.66 |
| 1995 | 29 | 283.81 |

தேசிய அபிவிருத்தியிலிருந்து கடன் வசதிபெறும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1995ஆம் ஆண்டில் பின்வரும் முறையில் நிறுவன அபிவிருத்தி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 16.00 லட்சமாகும்.

| கூட்டுறவு சங்க தொகை | ஒதுக்கப்பட்டிருந்தபணம் (ரூபா லட்சம்) | வருடத்தில் வழங்கப்பட்டடிருந்த நிறுவன உதவி (ரூபா லட்சம்) | | | |
|---|---|---|---|---|---|
| | | செயல் | உபகரணம் | அங்கத்தவர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் | மொத்தம் |
| 6.30 | 77.89 | 5.94 | 6.30 | 3.76 | 16.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வசதியினை எவ்வாறு பயன்படுத்துதல் வேண்டும் எவ்வாறு அங்கத்தவர் களுக்கு பங்கிடப்பட வேண்டும் என்பது தொடர்பில் 9 வேலைத் திட்டங்கள் நடத்தி அதில் 277 பேர் பங்குபற்றியிருந்தனர்.

## 14. பாலுற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க செயற்பாடுகள்

இவ்வருடத்தில் பாலுற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் 265ம் பாலுற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் 5உம் செயற்பட்டிருந்தன. ஆரம்பச் சங்கங்களின் அங்கத்தர்கள் 58201 ஆகும். அத்துடன் அச்சங்கங்களினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய் யப்பட்ட பாலின் அளவு 31.8 மில்லியன் லிட்டர் ஆகும். கம்பனிகள் சங்க அதிகாரப் பரப்பிற்குள் பால் சேகரிக்கத் தலைப்பட்டுள்ளதாலும். வடகிழக்கு மாகாணங் களிலுள்ள அமைதியற்ற சூழல் காரணமாகவும், அங்கத்தவர்கள் தொகையிலும் பால் சேகரிப்பு அளவிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது.

அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களினால் உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவில் 5%மானது பாலின் துணைப் பொருட்கள் உற்பத்திக்காகவும், சில்லறை விற்பனைக்காகவும், பாவிக்கப்பட்டதுடன் மிகுதிப்பால் மில்கோ நெஸ்லே நிறுவனங் களுக்கும் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சங்கங்களினால் தயாரிக் கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட பாலின் துணை உற்பத்திப் பொருட்கள் பற்றிய விபரம் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை 8

பாலுற்பத்திச் செயற்பாடுகள் - 1995

| | 1994 | 1995 | அதிகரிப்பு |
|---|---|---|---|
| தயிர் | 474809 | 498287 | 4.9 |
| யோகட் கோப்பை | 4870775 | 5260142 | 8.0 |
| நெய் போத்தல் | 31867 | 24453 | (23.76) |
| பால் டொபி பக்கட் | 47594 | 40684 | (14.51) |
| பட்டர் கிலோ | 915 | 299 | (67.32) |
| ஐஸ் கிறிஸ் கோப்பை | | | |
| (மி.லீ.80) | 41874 | 190939 | 355.9 |
| (மி.லீ.500) | 16485 | - | (100.0) |
| இனிப்பூட்டிய பால் போத்தல் | 304000 | 522548 | 75.1 |

பாற் பொருட்கள் தயாரிக்கப்படுவதன் நிமித்தமாக எருமைப்பாலுக்கு லீட்டருக்கு 4/= ரூபா உறுதிப்படுத்திய விலையைவிட அதிகமாக வழங்கி பாலுற்பத்தியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்திற்கு இயலுமாகியுள்ளது. அது எருமைப்பால் லீட்டர் ஒன்றுக்கு18/= வரை கொடுக்கின்றன. இந்நிலையினை கருத்திற்கொண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுற சங்கங்களுக்கு பால் துணை உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கவும், சில்லறையாக விற்பனை செய்வது தொடர்பாகவும் 5 பயிற்சிக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள் ளன.

மக்களுக்கு நியாய விலையில் பாலினையும் பாலுணவுப் பொருட்களையும் விநியோகிப்பதற்கும் பாலுற்பத்தி சங்கங்களை ஸ்திரப்படுத்தவும், மந்த போஷன நிலையினைத் தவிர்த்துக் கொள்ளவும் அரசு எடுக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்துடன் பால் விற்பனைச் சங்கங்களை நாடு முழுக்க ஆரம்பிக் கும் புதிய திட்டம் பற்றிய ஆரம்ப கருத்தரங்கும் இடம்பெற்றும், கொழும்பு நகரத் தில் பால் விற்பனைச் சாலை அமைப்பதற்கான கட்டடப்பணிகளை 4 கூட்டுறவுச் சங்கங்கள் 1995ஆம் ஆண்டின் இறுதி அரைமாதத்தில் ஆரம்பித்திருந்தன. அதில் ஒரு விற்பனைச்சாலை 1995 டிசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வருடத்தில் மிருக உணவு, மருந்து, பண்ணை உபகரணங்கள். செயற்கை முறைச்சினைப்படுத்தல், சேவை, கடன்வசதிகள் போன்ற பல்வேறு சேவை களையும் அனேக சங்கங்கள் நிறைவேற்றியுள்ளன. மகாவலி கால் நடை அபி விருத்திப் பிரிவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட மாகாவலி "எச்", "சீ" வலயங்களின் பால் சங்கங்களைப் பலப்படுத்தும் வேலைத் திட்டங்கள் இவ்வருடத்திலும் செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன் அதன் கீழ் சங்கத் தின் கணக்கு வைப்பு, ஊழியர்களுக்கான 2 பயிற்சி வகுப்புகளும், சங்க அதிகாரிக ளுக்காக 6 பயிற்சி வேலைத் திட்டங்களும் நடத்தப்பட்டன.

## 15. பல நோக்கு கூட்டுறவுச் சங்கச் செயற்பாடுகள்

### 15:1 நுகர்ச்சி நடவடிக்கை

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளில் தேசிய மட்டத்தில் முக்கிய இடம்பெறும் நுகர்ச்சிச் சேவை அளிக்கும் நடவடிக்கை மிக முக்கியமான தாகும். 1995இல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 300 செயற்பட்டிருந்ததுடன் இவைகளின் மொத்த விற்பனைக் களஞ்சியங்கள் 651, சில்லறைக் கிளை நிலையங்கள் 7306, சுயசேவை விற்பனைச் சாலைகள் 102, பாடசாலை விற்பனைச் சாலைகள் 16 செயற்பட்டிருந்தன.

இலங்கையின் எல்லாக் கிராமங்களிலும் பிரதேசங்களிலும் பரந்து விற்பனை விநியோகச் சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இச்சங்கங்களின் இத்தகைய சேவைகளானது பல்வேறு பிர்ச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு வரப்பிரதாசமாகவே அமைந்துள்ளது.

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலாயினும், தேசிய இடர் ஏற்படும் வேளையில் விநியோகச் சேவையினை ஏற்றிருக்கும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினதும் அதன் கிளைகளினதும் சேவை மூலமாக தேசிய பிரச்சினைக்கு முகம் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வு காணும் செயலாகவும் அது அமைந்துவிடுகின்றது. (மாகாண ரீதியில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரக் கூறுகளின் விபரம் இணைப்பு 6 இல் தரப்பட்டுள்ளது.)

## பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைகள்

1995 வருடத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கச் செயல் விளைவுகளின்படி மொத்த புரள்வு ரூபா 20705.4 மில்லியனாகும். அதன் அமைப்பு புள்ளிவிபரம் அட்டவணை 9 இல் காட்டப்பட்டுள்ளது.

புள்ளிவிபர அட்டவணை — 9

**1995 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்ளின் மொத்த புரள்வு**

| வகை | விற்பனை (ரூப.ல) | மொத்த விற்பனை யில் நூற்றுவீதம் |
|---|---|---|
| மொத்த புரள்வு | 20705.39 | - |
| மொத்த விற்பனை | 6572.05 | 31.7 |
| ரொக்க விற்பனை | 8730.63 | 42.2 |
| மாணவர் மதியவுணவு முத்திரை விற்பனை | 1282.07 | 7.0 |
| வறுமை நிவாரணங்கள் விற்பனை | 1178.34 | 5.7 |
| வேறு " " | 410.05 | 2.0 |
| சனசக்தி | 1171.61 | 5.0 |
| சமுர்த்தி | 1360.64 | 6.4 |

விற்பனைப் பெறுபேறுகள் :-

1995ஆம் ஆண்டில் 300 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் 184 இலாபக ரமாக செயற்பட்டிருந்ததுடன் பெறப்பட்டுள்ள தேறிய இலாபம் ரூபா 231.96 பத்துலட்சமாகும். 116 சங்கங்கள் நட்டத்துடன் செயற்பட்டிருந்ததுடன் அவைகளின் தேறிய நட்டம் ரூபா19.7 பத்துலட்சமாகும். (பலநோக்கு கூட்டுறம் சங்கங்களின் இயக்கக் கூற்றும், இலாப நட்டக் கணக்குகளும் 51ம் பக்கத்தில் இணைப்பு 7இல் காண்பிக்கப்படுகின்றது)

### 15.2 சமுர்த்தி செயற்பாடுகள்

சமுர்த்தி திட்டத்தினைச் செயற்படுத்தும் நிறுவனமாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை அரசு தேர்ந்தெடுத்தது முதல் 1995இல் எடுத்துக் காட்டான சேவை களைப் பலநோக்கு கூட்டுறவு, சங்கங்கள் ஆற்றியிருந்திருக்கின்றன. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மாகாண ரீதியில் சமுர்த்தி திட்டத்திற்கு அளித்துள்ள ஒத்துழைப்பினை புள்ளிவிபர அட்டவணை 10 எடுத்துக் காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி திட்ட செயற்பாடுகளில் கூட்டுறவு சங்கங்களின் பங்களிப்பு

| | மாகாண அலுவலகங்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மேல் | மத்திய | தென் | வ/கி | வ/மே | ஊவா | வ/மத் | சப்ர |
| செயற்படுத்தும் சங்கங்கள் | 38 | 40 | 34 | 07 | 32 | 17 | 28 | 23 |
| சமுர்த்தி திட்டப்பெறுநர்கள் குடும்பத் தொகை (000) | 260 | 174 | 205 | 21 | 191 | 103 | 87 | 160 |
| சமுர்த்தி பொருட்களும், பணமும், முத்திரையும் மாதாந்த பெறுமதிகள் (மில்லியன்) | 101.9 | 68.5 | 84.1 | 9.5 | 79.0 | 42.0 | 37.5 | 65.0 |

ஆதாரம்:
சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15:3 பலநோக்கு கூட்டுறவுச் சங்க செயற்குழுத் தேர்தல்**

1995ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாகாண சபைகளிலும் செயற்குழு தேர்தல் கடமைகளின் செயற்பாட்டு விபரம் பின்வருமாறு :-

புள்ளிவிவர இணைப்பு 11

**ப.நோ.கூ.சங்கங்களின் தேர்தல் கடமைகள் - 1995**

| மாகாணம் | சங்கத்தொகை |
|---|---|
| மேல் | 36 |
| மத்தி | 30 |
| சபரகமுவ | 16 |
| தெற்கு | - |
| வடமத்தி | 14 |
| வடமேல் | 14 |
| ஊவா | 17 |
| வடகிழக்கு | - |
| மொத்தம் | 127 |

**15: 4 இலாபப் பகிர்வும் மிகையூதியமும்**

1995ஆம் ஆண்டில் மாகாண சபைகளின் கீழ் உள்ள ப.நோ.கூ.சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்கு அளித்த இலாபப் பகிர்வும் மிகையூதியங்களும் பின்வருமாறு :-

புள்ளிவிவர அட்டவணை —12

**பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இலாபப்பகிர்வும் மிகையூதியமும் - 1995**

| மாகாணம் | இலாபப் பகிர்வு செய்த சங்கம் | இலாபமாக வழங்கிய தொகை | மிகையூதியம் அளித்த சங்கத் தொகை | மிகையூதியங் களின் பெறுமதி |
|---|---|---|---|---|
| மத்திய | 01 | 64265 | 04 | 74341 |
| மேல் | - | - | - | - |
| சபரகமுவ | 01 | 120000 | - | - |
| தெற்கு | 01 | 5898 | - | - |
| வடமத்திய | - | - | - | - |
| வடமேல் | 01 | 68060 | 04 | 128472 |
| ஊவா | - | - | - | - |
| வடகிழக்கு | - | - | - | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. கூட்டுறவுக் கிராமிய வங்கி

### 16:1 அறிமுகம்

கிராமிய வங்கிகள் இலங்கையில் கிராம நகர மக்களுக்கிடையே சிக்கன சேமிப்பு பழக்க வழக்கங்களை ஊக்குவிப்பதிலும் அவர்களுக்கு கடன் போன்ற நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் சிறப்பிடம் பெறுகின்றது.

நாட்டிலுள்ள 298 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் என்ற கட்டமைவுக்குள் 1251 கிராமிய வங்கிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளின் மேற் பார்வையும் அபிவிருத்தியும் அவ்வம் மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் திணைக்களமானது தேசிய ரீதியில் தெளிவானதொரு கொள்கைக்குள் அவைகளை ஒன்றுபடுத்தி அவைகளின் அபிவிருத்திக்காக ஓர் ஒழுங்கில் இயக்கவும் துணை புரிகின்றது.

### 16:2 கிளைப்பரம்பல்

1995ஆம் வருடத்தில் 298 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலும் கிராமிய வங்கி சங்கங்களிலும் 1251 மொத்த வங்கிக் கிளைகள் செற்பட்டுக் கொண்டிருந்தன. இவ்வருடத்தில் 21 புதிய வங்கிகள் தோற்றம் பெற்றன.

### 16:3 சேமிப்பு திரட்டுதல்

கிராமிய வங்கிகளில் 1995ஆம் ஆண்டு 4073483 சேமிப்பு கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன் சேமிப்புக்களின் பெறுமதி ரூபா பத்துலட்ச 7790 ஆகும். இதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணக்கு வைத்திருப்போரின் அதிகரிப்பு 3.8% சேமிப்பு அதிகரிப்பு 15.3% ஆகும்.

புள்ளி விபர அட்டவணை — 13

**கிராமிய வங்கி சேமிப்பு அதிகரிப்பு - 1995**

| வருடம் | சேமிப்பு | | மொத்த சேமிப்பின் வீத பிரகாரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | கணக்கு கள் தொகை | பெறுமதி ரூபா.ப.ல | அங். வைப்பு | அங். அல்லாதோர் வைப்பு | கேள்வி வைப்பு | நிலையான வைப்பு |
| 1994 | 3922981 | 6756.8 | 21.1 | 78.9 | 86.3 | 13.7 |
| 1995 | 4073483 | 7790.3 | 26.6 | 73.4 | 82.7 | 17.3 |
| அதிகரிப்பு | 3.8% | 15.3% | +5.5 | -5.5 | -3.6 | +3.6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16:4 கடனும் அடகுமுற்பணமும்

கூட்டுறவு கிராமிய வங்கிகளில் தனியாள் பிணை மீது ரூபா 25000/= வரையிலும் சொத்துக்களின் பிணை மீது ரூபா 100000/= வரையிலும் கூட்டுறவு சங்க அங்கத்தவர்கள் கடன் பெறலாம். வட்டி விகிதம் 17% த்திலிருந்து 21% வரையிலிருக்கும். சிறு கைத்தொழில் விவசாயம், கால்நடை, வளர்ப்பு, வீடமைப்பு, சுயதொழில் போன்ற முயற்சிகளுக்கு கடன் பெறலாம்.

இது தவிர மக்கள் வங்கியின் பிரதி நிதி என்ற அடிப்படையில் ஆபரணங்களின் பிணைகள் மீது முற்பணங்களும், கிராமிய வங்கிகளினால் அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதில் அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவரல்லாதாருக்கும் அவ்வசதியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டில் அங்கத்தவர்களின் பல்வேறு முயற்சிகளுக்காக 189981/= கணக்குத் தொகையைக் கொண்ட கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் ரூபா மதிப்பு 2159 பத்து லட்சங்களாகும். இது முன்னைய ஆண்டினைவிட 31.4% அதிகரித்திருக்கின்றது.

இவ்வருடத்தில் கடன் அறவீடு நூற்றுவீதத்தில் 85%மாக இருந்ததுடன் அது முன்னைய வருடத்தைவிட 1.4% வீதத்தால் குறைவாக தோன்றுகின்றது. 1995இல் வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன்களின் பெறுமதி சேமிப்பில் 28.5% மாகவிருந்ததுடன் முன்னைய ஆண்டினைவிட 1.4%த்தால் குறைந்துமுள்ளது.

புள்ளிவிபர அட்டவணை — 14

**கிராமிய வங்கிகளின் கடனளிப்புக்கள் 1995**

| பயன்பாடு | கடன்கூறுகள் | கடன்பெறுமதிகள் (ரூபா.ப.ல) |
|---|---|---|
| விவசாயக் (நெல்) கடன் | 13180 | 235.3 |
| உற்பத்தி " | 16376 | 251.9 |
| கால்நடை " | 10385 | 86.4 |
| திட்டக் " | 4061 | 36.4 |
| விடமைப்பு (நிர்மாணிப்பும், புதுப்பித்தலும்) கடன் | 76111 | 945.6 |
| சுய தொழிற் | 14646 | 113.1 |
| வியாபாரக் | 17175 | 180.7 |
| மீன்பிடி " | 949 | 19.6 |
| நுகர்ச்சி " | 37098 | 290.0 |
| மொத்தம் | 189981 | 2159.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 16:4:1 அடகு முற்பணம்

1995 ஆண்டில் கிராமிய வங்கிகளினால் ரூபா பத்துலட்சத்தில் 898.9 பெறுமதியான அடகுமுற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 65.5% அதிகரிப்பினைக் காட்டி நிற்கிறது. 1995ஆம் ஆண்டில் மொத்த அடகு முற்பணத்தின் தொகையினையும், மொத்த சேமிப்போடு ஒப்பிடுவோமாகில் அது 11.5% எனவாவதுடன் முன்னைய ஆண்டைவிட அது 3.5% வித்தியாசத்தையும் காட்டுகின்றது.

### 16:5 வளங்களைப் பயன்படுத்தல்

கிராமிய வங்களிடமுள்ள சேமிப்பு வைப்புகள் அடகு முற்பணங்களிலும் கடன்களிலும் உள்ளக முதலீடாக மாற்றப்பட்டுள்ளது. 1995இல் உள்ளக முதலீட்டு சுமை பற்றிய விபரத்தினை 15வது புள்ளி விபர அட்டவணையில் காண்பிக்கப்படுவதுடன் மேலதிகங்கள் எவ்வாறு மீள் முதலீடு செய்யப்பட்டுள்ளன என்பதனை புள்ளி விபர அட்டவணை16ல் காட்டுகின்றது.

புள்ளி விபர அட்டவணை 15

**கிராமிய வங்கி வளர்ச்சிகளின் பயன்பாடு உள்ளக முதலீடு 1995**

| வருடம் | வருடத்தில் வழங்கப்பட்ட கடன்களும் அடகு முற்பணங்களும் ரூபா.ப.ல | சேமிப்புக்களில் வீதமாக | வருட ஈற்றில் இருந்த கடன் அடகு முற்பண மீதிகள் ரூபா.ப.ல | சேமிப்புகளில் அது வீதமாக |
|---|---|---|---|---|
| 1994 | 2186.2 | 32.3 | 3372.8 | |
| 1995 | 3057.9 | 39.2 | 3677.7 | 49.9 |
| அதிகரிப்பு | 30.8 | | 9.0 | 47.2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிவிபர அட்டவணை 16

**கிராமிய வங்கிகளின் மேலதிக செல்வங்கள் மீள் முதலீடு 1995**

| நிறுவனம் | மீள் முதலீடு செய்யப்பட்ட வளங்களின் பெறுமதி | | மொத்த மீள் முதலீட்டு செல்வங்களின் நூற்று வீதப்பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 1994 ரூபா.ப.ல | 1995 ரூபா.ப.ல | 1994 | 1995 |
| மக்கள் வங்கி | 2172.1 | 1780.1 | 60.0 | 41.2 |
| தேசிய சேமிப்பு வங்கி | 89.1 | 60.3 | 2.5 | 1.4 |
| திறைசேரி உண்டியல் | 384.8 | 433.4 | 10.7 | 10.0 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | 2.6 | 99.4 | 0.1 | 2.3 |
| இலங்கை வங்கி | 2.5 | - | 0.3 | - |
| வ/ப கூட்டு கிராமிய வங்கி சமாசம் | 920.6 | 1930.7 | 25.5 | 44.8 |
| விவசாய அபிவிருத்தி நிதி | 12.9 | - | 0.4 | - |
| இலங்கை நுகர்ச்சி கூட்டு சங்க சமாசம் | 19.6 | 12.9 | 0.5 | 0.3 |
| | 3604.2 | 4316.8 | 100.0 | 100.00 |
| சேமிப்புகளில்நூற்று வீதம் | 53.3 | 55.4 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16.6 கிராமிய வங்கி சமாசம்

கூட்டுறவு கிராமிய வங்கியிடமும் பொதுவில் கூட்டுறவு இயக்கத்திடமும் உள்ள மேலதிக நிதிச் செல்வங்களை கூட்டுறவு இயக்கத்திற்குள்ளேயே தக்க வைத்துக் கொள்வதற்காக மீள் முதலீட்டினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும், மேலதிக செல்வங்களிலிருந்து உச்ச பயனை அடைந்து கொள்வதற்காகவுமே கிராமிய வங்கி சமாசம் தோற்றம் பெற்றது. 1995ஆம் ஆண்டில் கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், பொலனறுவை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய நிர்வாக மாவட்டங்களில் 10 மாவட்ட கிராமிய வங்கி சமாசங்கள் நிறுவப் பட்டன. அத்துடன் மாகாண கிராமிய வங்கி சமாசங்கள் 3ம் வடமேல், மத்திய, ஊவா ஆகிய மாகாணங்களில் நிறுவப்பட்டது. இவ்வருடத்திற்குள் இக் கிராமிய வங்கி சமாசங்களினால் 1616.8 பத்துலட்ச ரூபா பெறுமதியான சேமிப் புக்களைத் திரட்ட முடிந்தது. மேலும் அங்கத்துவ சங்கங்களுக்கு ரூபா பத்துலட்சம் 302.6ஐ கடனாகவும் வழங்கியுள்ளன. மேலதிகங்கள் வங்கிகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் அதிக பயனளிக்கும் வட்டி வீதத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 16:7 கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சொத்துக்கள் அதிகரிப்பு

1995ஆம் ஆண்டின் இறுதியில் கிராமிய வங்கிகள் ஈடுபட்டுள்ளது. தேறிய மேலதிகம் (திரண்ட) பத்துலட்ச ரூபா 971.3 என்பதுடன் அது முன்னைய ஆண்டினைவிட பத்துலட்ச ரூபா 178 என அல்லது 22.4% என அதிகரித்துள்ளது. 1995ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுறவு கிராமிய வங்கிகளிடமிருந்த மொத்த சொத்துக்களின் பெறுமதி பத்துலட்ச ரூபா 9403.6 என்பதுடன் அது முன்னைய ஆண்டைவிட 14.6% அதிகரிப்பு காணப்படுகிறது. இவ்வருடத்தில் கிராமிய வங்கிகளின் பணியாளர்கள் 4601 பேர் இருந்துள்ளனர் என்பதுடன் முன்னைய ஆண்டினைவிட 572 பேரினால் அது அதிகரித்துள்ளது.

## 16.8 கூட்டுறவு கிராமிய வங்கிப் பணியாளர்களது செயல் திறன் விருத்தி

பொல்கொல்லை கூட்டுறவு கல்லூரியினால் 1995ஆம் ஆண்டில் வங்கிச் சேவை முகாமையாளர்களுக்காக 4 பயிற்சி வகுப்புக்களும், வங்கித் துறை அதிகாரிகளுக் கான 2 பயிற்சி வகுப்புக்களும், வங்கி உள்ளக கண்காய்வாளர்களுக்கான 2 பயிற்சி வகுப்புக்களும் என 8 பயிற்சி வேலைத் திட்டங்கள் இடம் பெற்றன.

இவை தவிர கிராமிய வங்கி சமாசங்களினால் வங்கிப் பணியாளர்களுக்காக 11 வேலைத் திட்டப் பயிற்சி கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.

# 17. மீனவர் கூட்டுறவு சங்கம்

## 17.1 அறிமுகம்

இலங்கையில் மீன் பிடித்துறைக்கு கூட்டுறவுத் துறையின் பங்களிப்பு மிகப் பரந்துபட்டவை. மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் அதிகளவில் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள். இதனால் மீன்பிடித் திணைக்க ளம் மீனவ மக்களுடன் தொடர்புறும் போது மிகமுக்கிய தொடர்புச் சாதனமாகப் பயன்படுத்துவது மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களையாகும். அத்துடன் நீரியல்வள மீன்பிடி திணைக்களமும் மாகாண கூட்டுறவு அலுவலகங்களும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து இக் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்காக உழைக்கின்றன. மாகாண மட்டங்களிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்த மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தினதும் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்க சம்மேளனம், கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழும் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றன.

மேலும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரொருவரும், பணியாளர்களும் நீரியல்வள மீன்பிடித் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

### 17:2 பதிவு செய்யப்பட்டுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கம்

புள்ளி விபரவியல் அட்டவணை :17

**பதிவு செய்யப்பட்டுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் - 1995**

| சங்க வகை | சங்கத் தொகை | அங்கத்தவர்கள் |
|---|---|---|
| கிராம மட்ட ஆரம்பச் சங்கம் | 769 | 89396 |
| பெரிய ஆரம்ப சங்கம் | 15 | 8200 |
| ஒரு நாள் - பலநாள் கலச் சங்கம் | 09 | 410 |
| அகில இலங்கை கரைவலை உரிமையாளர் சங்கம் | 01 | 42 |
| மொத்தம் | 794 | 98048 |

### 18. கூட்டுறவுச் சங்க அபிவிருத்திக்கான உதவி

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி கருதி பின்வரும் நிதிகள் செயற்படுகின்றன.

1. கூட்டுறவு நிதி
2. திறைசேரி நிதி
3. நம்பிக்கை நிதி
4. விவசாய உற்பத்தி அபிவிருத்தி நிதி

### 18:1 கூட்டுறவு அபிவிருத்தி நிதி

கூட்டுறவுச் சட்ட ஏற்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டள்ள கூட்டுறவு நிதியின் 1995ஆம் ஆண்டைய செயற்பாடுகள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| 1995.01.01ஆம் திகதியன்று மீதி | | ரூபா 3410166.72 |
| கூட்டுக : 1995ஆம் ஆண்டில் வரவு | | ரூபா 8027523.19 |
| மொத்தம் | | 11437689.91 |
| கழிக்க : 1995ஆம் ஆண்டில் செலவு | /வங்கியிடப்பட்டது | 8761015.87 |
| 1995.12.31ஆம் திகதியன்றைய மீதி | | 2676674.04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18:2 நம்பிக்கை நிதி - வட்டிக்கணக்கு**

நம்பிக்கை நிதியிலிருந்து 1995ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் விபரம் பின்வருமாறு:-

புள்ளிவிபர அட்டவணை :18

**நம்பிக்கை நிதி - கடன் - 1995**

| | | | |
|---|---|---|---|
| 1. | வ/ப இலங்கை கூட்டுறவு புடவைச் சமாசம் | ரூபா | 25,00,000/= |
| 2. | வ/ப கறன்தெனிய ச.ன.ச சங்க சமாசம் | ரூபா | 10,00,000/= |
| 3. | வ/ப அரச ஊழியர் கடனளிப்பும் சேமிப்பு சங்கம் | ரூபா | 15,00,000/= |
| 4. | வ/ப இலங்கை இறப்பர் கூட்டுறவுச் சங்க சமாசம் | ரூபா | 20,00,000/= |
| 5. | வ/ப இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூ.சங்க சமாசம் | ரூபா | 2,00,000/= |
| 6. | வ/ப தொம்பே, தே.தொ.பால் உற்.சங்க சமாசம் | ரூபா | 40,000/= |
| 7. | வ/ப அகில இலங்கை அப்பியாசக் கொப்பி உற்.கூ.சங்கம் | | 22,25,000/= |
| 8. | கூ.அபி.ஆணை/பதி. வடமேல் மாகாணம் (உதவி) | | 5,00,000/= |
| 9. | வ/ப ஊவா மாகாண கூட்டுறவு கிராமிய வங்கி சமாசம் (உதவி) | | 2,00,000/= |

வரவு, செலவு விபரம்

| | | |
|---|---|---|
| 1996.01.01 முன் கொ.வரப்பட்ட மீதி | ரூபா | 119,38,354.11 |
| வருடத்தில் வரவு | ரூபா | 194,477,713.45 |
| மொத்தம் | | 206,416,067.56 |
| கழிக்க : வருடத்தில் கடனாகவும் வங்கிகளில் வைப்பாகவும் | | 195857436.26 |
| மீதி | | 10558631.30 |

**18:3 விவசாய உற்பத்தி விற்பனை அபிவிருத்தி நிதி**

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும், கூட்டுறவு மாகாண அலுவலகங்களும், கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்புடன் விவசாய உற்பத்திப் பொருள் கொள்வனவுக் கடன் வசதியினை உரிய வேளையில் கொடுக்கும் நோக்குடன் இந்நிதி உருவாக்கம் செய்யப்பட்டது.

1995ஆம் ஆண்டில் 56 சங்கங்கள் இந்நிதிக்கு பங்களிப்புச் செய்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிச் செயற்பாட்டின் முன்னேற்றம் பின்வருமாறு:-

| | ரூபா லட்சம் | ரூபா லட்சம் |
|---|---|---|
| பங்கு முதல் | 5.80 | 5.90 |
| வைப்புக்கள் | 214.26 | 234.87 |
| மாகாண சபை உதவு தொகை | 10.0 | 10.0 |
| கூட்.திணைக்களத்தின் உதவுத் தொகை | 20.0 | 20.0 |
| அளிக்கப்பட்ட கடன்வசதிகள் | 187.0 | 150.0 |

1995.12.31ஆம் திகதியன்று 11 சங்களிடமிருந்து 116.9 லட்ச ரூபா அறவிட வேண்டியுள்ளது. கூட்டுறவு சங்கங்களின் வைப்புக்களுக்காக 16% வட்டி செலுத்தப் பட்டு வருவதுடன் வழங்கப்படும் கடன்களுக்காக 18% வட்டியும் அறவிடப்படு கின்றது. 1995வருடத்தில் அங்கத்துவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப் படவேண்டியுள்ள வட்டி 3611828/= ரூபாவாகும்.

1995ஆம் ஆண்டில் இந்நிதியின் மொத்தப் பெறுமதி 319.45 லட்ச ரூபாக்களாக இருந்தது.

## 18:4 திறைசேரி நிதி

இந்நிதியின் பிரதான நோக்கம் கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற்பாட்டினை மேம்படுத்தலாகும். கூட்டுறவு, மாகாண சபைகள், உள்ளூராட்சி, தேசிய வைத்திய அமைச்சுச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட குழுவினால் நிர்வகிக்கப் படும் இந்நிதியிலிருந்து 1995ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் விபரம் பின்வருமாறு :-

புள்ளிவிபர அட்டவணை 19

கூட்டுறவு அபிவிருத்தி திறைசேரி நிதியிலிருந்து கடன்கள் அளிக்கப்பட்ட ப.நோ.கூ. சங்கங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1995.01.01முதல் 1995.12.31 வரை

| சங்கப் பெயர் | கடன்வழங்கிய திகதி | கடன்பயன்பாட்டுத் திட்டம் | கடன் தொகை ரூபா லட்சம் |
|---|---|---|---|
| 1. வ/ப. பதுளை ப.நோ.கூ. சங்கம் | 95.01.31 | பேக்கரித் திட்டம் | 1.0 |
| 2. வ/ப. மாத்தறை " " | 95.3.10 | புடவைத் தொழில் | 20.0 |
| 3. வ/ப. மகர " " | 95.3.17 | பேக்கரி | 1.9 |
| 4. வ/ப. யடிநுவர " " | 95.3.15 | நுகர்ச்சி ஆபிவிருத்தி | 10.0 |
| 5. வ/ப. பலபிடிய " " | 95.04.11 | புடவைத் தொழிளாலர் சம்பளம் | 6.4 |
| 6. வ/ப. கலகெதர " " | 95.06.26 | நுகர்ச்சி அபிவிருத்தி | 10.0 |
| 7. வ/ப. கா்லி நல்லடக்க சேவை | 95.07.28 | நல்லடக்க வாகனம் கொள்வனவு | 10.0 |
| 8. வ/ப. ஊவா பரணகம வடக்கு ப.நோ.சங்கம் | 95.08.10 | நுகர்வு விருத்தி | 17.0<br>7.0 |
| 9. வ/ப. பொத்துவில் ப.நோ.கூ. சங்கம் | 95.09.10 | | |
| | | | 83.3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவு செலவு - திறைசேரி நிதி

| | |
|---|---|
| 1995.01.01இல் முன்.கொ.வந்த மீதி | 4122514.27 |
| 1995ஆம் வருடத்தில் வரவு | 30724952.54 |
| மொத்தம் | 34847466.81 |
| கழிக்க : 1995ஆம் வருடத்தில் செலவு | 31034367.57 |
| மீதி | 3813099.24 |

## 19. உச்ச மட்ட கூட்டுறவுச் சங்க சமாசங்கள்

### 19:1 வரையறுக்கப்பட்ட இலங்கை தேசிய கூட்டுறவு சபை

இச்சபையில் அங்கத்துவம் பின்வருமாறு :-

அ) மாவட்ட கூட்டுறவுச் சபைகள்

ஆ) உச்ச மட்ட கூட்டுறவுச் சமாசங்கள்

இவ்வருடத்தில் பின்வரும் சேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அ) கல்வி.

ஆ) மகளிர் விவகாரங்கள்

இ) காப்புறுதி

ஈ) வங்கி ஆலோசனை சேவை

உ) வீடமைப்பு பணி

ஊ) அச்சகச் சேவை

எ) வெளிநாட்டு சேவை

ஏ) வருமான வரி ஆலோசனைச் சேவை.

கல்வி நடவடிக்கைகள்

கூட்டுறவுக் கல்வியூடாக கூட்டுறவின் அனைத்து அங்கத்தவர்களுடைய முன்னேற்றத்தினை தேசிய கூட்டுறவு சபை எதிர்பார்ப்பதுடன் அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு பின்வரும் பயிற்சித் திட்டங்களை நாடு முழுக்க அமுல்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | வேலைத் திட்ட எண்ணிக்கை | பங்கு பற்றி யோர் |
|---|---|---|
| அ) கல்வி சுற்று | 38 | 38 |
| ஆ) பணிப்பாளர் சபை பயிற்சி | 18 | 450 |
| இ) மகளிர் வேலைத் திட்டங்கள் | 04 | 137 |
| ஈ) பாடசால மாணாக்கர்கள் | 07 | 1062 |
| உ) பாடநெறி அபிவிருத்தி | 05 | 105 |
| ஊ) பயிற்றுவோரைப் பயிற்றுவித்தல் | 02 | 251 |
| எ) விவசாயச் சங்க அங்கத்தவர்கள் | 04 | 92 |
| ஏ) தலைமை அபிவிருத்தி | 03 | 78 |
| ஐ) நுகர்ச்சி முகாமை | 04 | 59 |
| ஒ) எதிரிடைச் செயல் | 03 | 134 |
| ஓ) கிராமிய வங்கி பணியாளர்கள் | 04 | 206 |
| ஔ) இளைஞர் | 05 | 108 |
| ஃ) வேறு | 27 | 1741 |
| | 124 | 4451 |

இவ்வேலைத் திட்டங்களுக்காக சபை ரூபா1831745/= செலவிடப் பட்டுள்ளது.

இது தவிர இவ்வாண்டில் சபையினது 5 (ஐந்து) பயிற்சி நிலையங்கள் மார்க்க மாகக் கூட்டுறவு பணியாளர் பயிற்சியூடாக இயக்கத்திற்குள் இருப்போருக்கும் கூட்டுறவுடன் இணைந்து கொள்ள நாடுவோருக்கும் அனேக பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளது.

### காப்புறுதி நடவடிக்கைகள்

கூட்டுறவுத் துறையுள் தக்க வைத்துக் கொள்ளக் கூடிய அதிக செல்வங்கள் இத்துறையின் வியாபாரச் சொத்துக்களைக் காப்புறுதி செய்வதூடாக வெளியே செல்லக் கூடிய நிலையினை ஓரளவாவது அல்லது அதில் ஒரு பகுதியினை யாவது தடுத்துக் கொள்ளக் கூடிய வகையில் தேசிய கூட்டுறவுச் சபையானது தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதான பிரதிநிதிப் பதவியினையும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சாதாரண முகவர் பதவியினையும் பெற்றுக் கொண்டுள்ளது. இதன் மூலம் 2857109 ரூபா நிகர இலாபம் பெற்றதோடு அதில் ரூபா 1539650 அளவிலான தொகையினை கழிவாக சங்கங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் பிரிவு

கூட்டுறவு மகளிர் குழுக்களின் செயற்பாட்டினைத் திட்டமிட்டு இயக்குவதனால் அங்கத்துவத்தவ மகளிர்களின் முன்னேற்றத்திற்கும், அறிவூட்டுவதற்கும் சபையின் மகளிர் பிரிவு செயலாற்றிக் கொண்டிருக்கின்றது.

தலைமைத் திறன் வளர்ச்சியும், மகளிர்களைப் பலம் பெறச் செய்தலும், மகளிர் அபிவிருத்தி, தொழில் வல்லமை விருத்தி, மகளிர் குழுக்களூடாக சூழல் பாதுகாப்பு, கூட்டுறவு பாலர் பாடசாலை ஆசிரியைகளைப் பயிற்றல் ஆகிய தலைப்புக்களின் கீழ் உரை, கலந்துரையாடல், பிரயோக பயிற்சி போன்றவற்றினால் கூட்டுறவினதும், சமுதாயத்தினதும் தலைமைத்துவத்தினைப் பொறுப்பேற்க பெண்களைத் தூண்டுவதும், பெண்களின் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றிற்குப் பொருத்தமான பரிகாரம் தேடுவதும், இக்குழுவின் பணிகளாகும். 1995ஆம் ஆண்டில் மாவட்ட மகளிர் குழுத் தலைவிகளை அழைத்து தேசிய மட்டத்தில் சபையின் கேட்போர் கூடத்தில் இரு மாநாடுகள் நடத்தப்பட்டது. பாலர் பாடசாலை ஆசிரியைகளின் பயிற்சியும் நடத்தப்பட்டது. மாகாண மட்டங்களில் 3 வேலைத் திட்டங்களும் இடம்பெற்றது. இவ்வேலைத் திட்டங்களில் ப.நோ.கூ. சங்க ச.னச, மீன்பிடி சங்கங்களின் மாதர் தலைவிகள் கலந்து கொண்டனர்.

## வங்கி ஆலோசனைச் சேவை

கிராமிய வங்கிப் பிரிவு மேலதிக செல்வங்களை பாதுகாப்பாகவும், உற்பத்திக் கேற்பவும் முதலீடு செய்யும் நோக்கத்தோடு முன்னய வருடத்தில் தொடங்கப்பட்ட சங்கங்களை திறைசேரி உண்டியலில் முதலிடச் செய்யும் திட்டத்தில் இவ் வருடத்திலும் அத்தகைய முதலீடு 1109 மில்லியன் ரூபா இடம் பிடித்திருந்தது.

## வீடமைப்புச் செயல்

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் சேவைகளில் சிறப்பிடம் பெறும் சேவைத் துறையாக இதனைக் கருதமுடியும். முன்னைய வருடத்தைப்போலவே இவ்வருடத்திலும் சபையின் கட்டட அமைப்பு, வேலைகளிலும் மதிப்பிடல், கருமங்களிலும் அவ்வாறே. கூட்டுறவுச் சங்க சமாசங்களுக்கும் அத்தகைய சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவு இயக்கத்திற்கு இப்பிரிவு அளிக்கும் சேவைகளான திட்டமிடல், மதிப்பீடு தயாரித்தல், நிர்மாணிப்பு பணிகள், மேற்பார்வை போன்றவைகளில் ஆலோசகராகக் கூடிய அளவில் சேவையளிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு சேவை

சர்வதேச கூட்டுறவு சம்மேளனத்தின் இயங்கும் அங்கத்தவராக 1995இலும் இலங்கை தேசிய கூட்டுறவு சபை செயலாற்றியுள்ளது. அவ்வாறே நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பணியாளர்கள் உட்பட 41 பேருக்கு வெளிநாட்டு புலமைப் பரிசுகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்தின் மஞ்செஸ்டர் நகரத்தில் இடம்பெற்ற சர்வதேச கூட்டுறவு சம்மேளத்தின் நூற்றாண்டு விழாவிலும், ஜப்பானின் டோக்கியோ நகரத்திலும் இடம்பெற்ற ஆசிய விவசாய உச்ச மட்ட சமாசத் தலைவர்களின் மாநாட்டிலும், இந்தியாவின் பங்களூரில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு சம்மேளனத்தின் உபதலைவராக அதன் இரண்டாவது நிறைவேற்று குழுக் கூட்டத்திலும் தேசிய கூட்டுறவு சபையின் தலைவர் அவர்கள் பங்குபற்றியிருந்தார்.

## 19:2 வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்க சமாசம்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 2242 அங்கத்துவர்களாக கொண்டு அமைந்துள்ள இச்சமாசம் அங்கத்துவ, அங்கத்தவரல்லாத கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் நுகர் வுப் பொருட்களை கடன்களுக்கும், ரொக்கத்திற்கும் விற்பனை செய்கின்றது. முன்னைய வருடங்களைப்போலவே இவ்வருடத்திலும் இச்சமாசம் பின்வரும் வகையில் இறக்குமதி கடமைகளில் ஈடுபட்டுள்ளது.

புள்ளிவிபர அட்டவணை இல 20

| பொருட்களின் வகை | அளவு | பெறுமதி (6 லட்சம்) |
|---|---|---|
| சீனி | மெ.தொன் 500 | 142 |
| பருப்பு | ” 516 | 169 |
| மீன்பிடி | கொள்கலன் 45 | 470 |
| விதை உருளைக்கிழங்கு | மெ.தொன் 100 | 59 |

ரூபா 44.3 பத்துலட்சம் பெறுமதியுடைய பொருட்கள் இவ்வருடத்தில் கடனாக சங்கங்களுக்கு விநியோகித்திருப்பதுடன், அங்கத்துவ சங்கங்கள் 65.7 பத்து லட்ச ரூபாவினை சமாசத்தில் வைப்பாகவும் இட்டுள்ளன. இத்தொகை மக்கள் வங்கியின் நிரந்தர வைப்பல் கணக்கிடப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் சமாசத் தின் மொத்த விற்பனை 207.9 பத்து லட்ச ரூபாவாக இருப்பதுடன் பெறப்பட்டுள்ள மொத்த இலாபம் 11.36 பத்துலட்ச ரூபாவாகும். நிகர இலாபம் 0.46 மில்லியன் ரூபாவாகும். மேலதிகப் பற்று வட்டியாக 6.87 பத்து லட்ச ரூபா செலுத்தியிருப்ப துடன் காப்புறுதியாக 1½லட்ச ரூபாவுக்கு கிட்டிய தொகை செலவிடப்பட்டுள்ளது. தற்போது சமாசத்தின் மொத்தப் பணியாளர்கள் 42 பேர்களாகும்.

## 19:3 வ/பட்ட இலங்கை கூட்டுறவு சந்தைப் படுத்தற் சமாசம் (மார்க்பெட்)

கூட்டுறவுத் துறையின் தேசிய விவசாய உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும், மொத்த சேமிப்பு களஞ்சியப்படுத்தவும், சில்லறையாக விற்பனை செய்வதற்கும் உள்ள முக்கிய நிறுவனமொன்றாக இது செயற்படுகின்றது. 1995ஆம் ஆண்டில் இச்சமாசம் ஏற்றுமதி இறக்குமதி பணிகளிலும் ஈடுபட்டிருந்தத. அச் செயற்பாட்டினால் 92 பத்து லட்ச ரூபா பெறுமதியான விதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருளைக்கிழங்கு, செத்தல் மிளகாய், நெத்தலிக்கருவாடு, சமன், பெரிய வெங்காயம் போன்ற பொருட்களை இறக்குமதி செய்திருந்தது. விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கினை இறக்குமதி செய்திருந்தும் இவ்வருடத்தில் நிகழ்ந்த எதிர் பாராத சந்தைத் தடைகாரணமாக எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்ள முடியாமல் போனது. ரூபா 5 மில்லியன் பெறுமதியான வெற்றிலை ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தும் இது தொடர்பாக சமாசம் அடைந்திருந்த நிலையில் தனியார் நிறுவனங்கள் இத்துறையில் குதித்து போட்டியிட்டமை காரணமாக பாரிய பின்ன டைவினை சமாசம் எதிர் நோக்கியது. விமானத்தில் இடம் கிடைக்காமையே இத்துறையில் ஏற்பட்ட மிகப்பெரிய தடையாய் அமைந்தது. 1995இல் சமாசத்தின் மொத்தவிற்பனை 304.2 பத்து லட்ச ரூபா என்பதுடன் வங்கி மேலதிகப்பற்று வசதி வட்டியாக 2.5 பத்து லட்ச ரூபாக்களையும் வருமான வரியாக ரூபா 1154303/= வினையும் வருமான வரியாக ரூபா 12271/= வினையும் சமாசம் செலுத் தியுள்ளது.

## 19:4 வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கைத்தொழிற் சமாசம்

இலங்கையின் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் உச்ச மட்ட நிறுவன மொன்றன இதன் அங்கத்தவர்கள் 187 ஆகும்.

சமாசத்திற்குரித்தான மாதம்பே தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் தும்பு உற்பத்தியினையும், உடகொட தொழிற்சாலையிருந்து கிடைக்கப் பெறும் கேந்திரப், சாறி, இறப்பர்பால் உற்பத்தியினையும் பயன்படுத்தி நாவின்ன தொழிற் சாலையில் மெத்தை உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வருடத்தில் பின்வரும் வகையில் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உற்பத்திகள் இடம் பெற்றிருந்தன.

| | |
|---|---|
| நாவின்ன தொழிற்சாலை மெத்தை கன அடி 146691 பெறுமதி, | 29346938 |
| உடகொட தொழிற்சாலை கேந்திரபசாறி இறப்பர் பால்கிலோ 161728 பெறுமனம் | 8761458/= |
| மாதம்பை தொழிற்சாலை தும்பு கிலோ 58381 பெறுமதியோ 415165/= | |
| முறுக்கியதும்பு கிலோ 235020 பெறுமதி 4389591/= | |

வருடத்தில் 43.3 பத்துலட்ச ரூபா பெறுமதியுடைய விற்பனை இடம் பெற்று 3.2 ப.லட்ச ரூபா அரைவாசிக்கு மேல் இலாபம் பெறப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் ரூபா 329933/= வங்கிமேலதிகப்பற்று வட்டியாகவும், ரூபா 135310/= காப்புறுதியாகவும், ரூபா 4154195/= விற்பனை வரி, பாதுகாப்பு வரி வருமான வரியாகவும் செலுத்தப்பட்டுள்ளது. ரூபா 1344960/= பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் சியோடா உற்பத்திப் பொருட்களுக்கு எஸ். எல். எஸ். தர முத்திரை கிடைத்தமை குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19:5 வ/பட்ட இலங்கை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சம்மேளனம்

சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் கிராம மட்டத்திலும் ச.ண.ச சங்கங்களை அமைத்து அவைகளூடாக அங்கத்தவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் பல் வேறு திட்டங்களுக்கு கடன் வழங்குவதும், கிராமிய மக்கள் மத்தியில் சிக்கன சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவிக்கும் கருவியாகவும் மேலும் அவர்களுக்கு வங்கிப் பழக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமொன்றாகவும் இவைகளின் மூலம் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்த இச்சம்மேளனம் அயராதுழைக்கின்றது. இச்செயற்பாட்டின் பெறுபேறாக வருடக் கடைசியில் நிறுவன, கிராம மட்டத்தில் 7942 ச.ன.ச கிராமிய வங்கிகள் செயற்பட்டிருந்தன. ஆரம்ப சங்கங்கள் பங்கு பற்றுதலுடன் மாவட்ட சமாசங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பநிலை சங்கங்களில் 726277பேர் அங்கத்தவர்களாயிருப்பதுடன், ச.ன.ச. சங்கங்களை ஆரம்ப நிலைக் கடனுதவி சங்கங்களின், மாவட்ட ச.ன.ச. சமாசங்களினதும் பொறுப்புக்களை பின்வருமாறு வகுத்துக் கூறலாம்.

| | ஆரம்ப கடனுதவி சங்கங்கள் ரூபா ப. ல | மாவட்ட கடனுதவி சமாசங்கள் ரூபா ப.ல. |
|---|---|---|
| பங்கு | 301.8 | 55.6 |
| சாதாரண சேமிப்பு | 670.0 | 199.1 |
| கட்டாய " | 283.5 | 23.6 |
| நிலையான | 177.7 | 90.8 |
| சிறுவர் | 226.0 | - |
| அங்கத்தவரல்லாதார் | 252.5 | 32.5 |
| பிற | 126.5 | 68.3 |
| | 2038.0 | 469.9 |

இத்தகைய ஆரம்ப சங்கங்களில் 3027 பணியாளர்களும், மாவட்ட சமாசங்களில் 1322 பணியாளர்களும் கடமையிலீடுபட்டிருந்தார்கள்.

வருடக் கடைசியில் ஆரம்ப சங்கங்களிலும், மாவட்ட சமாசங்களிலுமுள்ள சொத்துக்களின் பெறுமதி 203.5 பத்துலட்ச ரூபாக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வழங்கல்

1995ம் ஆண்டில் ச.ன.ச சங்கங்களினால் பின்வரும் முறையில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ரூபா பத்துலட்சம்) 1995

புள்ளிவிபர அட்டவணை 22

| | மாவட்ட சமாசம் ரூபா.ப.ல | ஆரம்ப சங்கங்கள் ரூபா.ப.ல |
|---|---|---|
| விவசாயத்திற்கு | 99.4 | 207.6 |
| கால் நடை வளர்ப்பு | 28.6 | 43.5 |
| சிறு கைத்தொழில் | 23.9 | 126.3 |
| வீடமைப்பு | 68.8 | 138.6 |
| வியாபாரம் | 46.5 | - |
| வேறு | 201.5 | 1161.6 |
| | 468.7 | 1677.6 |

**19.6 வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு புடவை கைத்தொழில் சங்க சமாசம்**

இச் சமாசத்தில் புடவைக் கைத்தொழில் சங்கங்கள் 29 அங்கத்துவம் பெற்றுள் ளன. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்குவதும், முடிவுப் பொருட்களை விற்பனைக்கிட உதவுவதும் அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியினை வழங்குவதுமே சமாசத்தின் பிரதான நோக்காய் இருப்பினும் தற்போதய பொருளாதாரச் சூழலில் அத்தகைய நோக்கத் தினைப் பூரணமாக நிறைவேற்ற சமாசத்திற்கு இயலாதுள்ளது. எவ்வாறிருப்பினும் ரூபா 21708 செலவிடப்பட்டு 3 பயிற்சி வேலைத் திட்டங்கள் நடைமுறைபட்டு அதில் 71பேர் பங்கேற்றிருந்தனர்.

இவ்வருடத்தில் சமாசத்தின் மொத்த விற்பனை 88 லட்ச ரூபா என்பதுடன் பெறப்பட்டுள்ள இலாபம் ரூபா 10 லட்சத்தின் அரைவாசிக்கு மேலாகும். வங்கி மேலதிகப்பற்று வட்டியாக 11990/= ரூபா செலுத்தப்பட்டிருப்பதுடன், காப்புறுதித் தெகையாக 5475/= ரூபாவும், விற்பனைச் சுழற்சி வரியாக 65845/= ரூபாவும், செலுத்தப்பட்டுள்ளது. வியாபார நடவடிக்கைளை முன்னேற்றுவதற்காக கூட்டுறவு அபிவிருத்தி நிதிலிருந்து ரூபா 25 லட்சம் கடனாகப் பெறப்பட்டிருக்கின்றது மொத்தின் பணியாளர்கள் 06 பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19.7 வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் கூட்டுறவுச்சங்கம்

01. அங்கத்துவம்

| | |
|---|---|
| பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் | - 59 |
| இறப்பர் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் | - 18 |
| | 77 |

சீட் இறப்பர் விற்பனை

அங்கத்துவ சங்கங்களிலிருந்தும் 4 கிளைகளினாலும் கொள்வனவு செய்யப்படும் சீட் இறப்பரினை ஏற்றுமதி செய்வதற்காக ச.தொ.ச நிறுவனத்துடனும் பிற தனியார் நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றது.

1995இல் அவ்வாறு வழங்கப்பட்ட சீட் இறப்பர் பெறுமதி ரூபா 21716000/= என்பதுடன் அதன் தொகை 402143 கிலோவாகும்.

சீட் இறப்பர் உற்பத்திக்குத் தேவைப்படும் போமிக் அசிட் இரசாயனப் பதார்த்தம் ரூபா 236000/=க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது

அஸோஸியட் மோட்டோர்ஸ் நிறுவனத்தில் டயர் மீள நிரப்பும் முகவராக செயற்பட்டு ரூபா 56000/= இலாபம் பெறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் - 1995

இலங்கைக் கூட்டுறவுத் துறையானது தொடக்கத்திலிருந்தே அரசு வழங்கும் ஆதரவுக்கேற்ப ஏற்ற இறக்கங்களை சந்தித்துள்ளது. அரசின் உதவி கூடுதலாக கிடைக்கும் வேளைகளில் வளர்ச்சிப்போக்கினையும் அவை குறைவடையும் போது சில பின்னடைவுகளையும் எதிர்நோக்கத் தவறவில்லை. பல வருடகால நீண்ட இடை வெளியின் பின்னர் கூட்டுறவுத் துறை தேசிய பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது என 1995இல் கண்ட அரசு கூட்டுறவில் சிரத்தை காட்டியது. அதிகளவான மக்களைக் கொண்டு பொதுத் தொழில் சார் முறையாக இயங்கும் கூட்டுறவுக்கு புரள்வு வரியினை நீக்கியதிலிருந்து இதனை தெளிவாக அறியமுடிகின்றது. கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்களை மொத்த விற்பனை வரியிலிருந்து நீக்கிவிட இரு பிரதான காரணங்களே இருந்தன.

1. பொது மக்கள் நலன்களுக்கான பொதுச் சேவைகளில் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிப்பதும், கூட்டுறவுத்துறை தேசிய பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் புதிய வியாபார முயற்சிகளைத் தேர்ந்தெடுக்கத் தேவையான தைரியத்தினையும் உதவியினையும் அளிப்பதும்,

2. இயற்கையாகவே பல்வேறு செல்வ வளங்களுக்கு உரிமை பாராட்டும் தனியார் துறையினருடன் போட்டியிடும் வேளையில் வசதி வாய்ப்புக்களற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏதோ ஓர் அளவில் காப்பிடுதலும் கூட்டுறவுச் சங்கங்களை பலம் பொருந்திய வியாபார அமைப்பொன்றாக செயற்பட வைக்கத் தேவையான பக்க பலத்தினை கொடுப்பதும்.

தேசிய பொருளாதாரத்தில் அத்தியவசிய தொழில் சார் முயற்சியொன்றாக கூட்டுறவு அமைப்பு விளங்குகிறது என்பதை இதிலிருந்து நன்குணரமுடியும்.

இது தவிர இந்நாட்டின் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கும் முத்திரை வரியிலிருந்து ஏற்கனவே விலக்களிக்கப்பட்டிருந்திருக்கிறார்கள். நீண்ட காலமாக அனுபவித்து வந்த இவ் உரிமை 80களின் போது அற்றுப்போனது. அவ் உரிமையினை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் வழங்க 1995இல் அரசு முடிவு செய்தது. இது தொடர்பாக தேவைப்பட்ட சட்ட மூலத்தினை தயாரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 1996இல் ஆரம்பத்தில் அவ்வுரிமை மீளக் கொடுக்கப்படும் என்பதை எதிர்பார்க்கலாம். புரள்வு வரி நீக்கமும், முத்திரை வரி அகல்தலும், கூட்டுறவு இயக்கத்தின் மூலதனத்தினையும் அமைப்புச் சக்தியினையும், மேலும் வலுப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் உதவி கூட்டுறவு இயக்கத்திற்கு கிடைப்பதனால் தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கூடிய பங்காற்றவேண்டிய பொறுப்பு பொறுப்பிக்கப்படுகின்றது என்பதனை வலியுறுத்தவே மேற்குறித்த விடயங்களை நான் குறிப்பிட காரணமாகும்.

கூட்டுறவினை சுதந்திரத் தன்மையுள்ள சுயாதீன இயக்கமொன்றாக நிறுவிக் கொள்ள வேண்டிய தேவையினை ஊக்குவிப்பதற்காக தற்போதைய கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் வேலைத் திட்டம் இவ்வருடத்தில் முன் கொண்டு செல்லப்பட்டது. கூட்டுறவுச் சட்டத்தினை முன்னேறியுள்ள சமூக பொருளாதார சூழலுக்கேற்ப திருத்தியமைத்துக் கொள்வதற்காக கூட்டுறவுத் தலைவர்களுடனும் அரச அதிகாரிகளுடனும் பல தடவைகளில் கலந்துரையாடல்கள் இடம் பெற்றிருந்தன. ஆழமான நீண்ட விவாதங்களின் பின்னர் கூட்டுறவுச் சட்டத்தினை திருத்துவதற்கான புதிய சட்டம் இவ்வருடத்தில் தயாரிக்கப்பட்டது. சட்ட வரையறைகள் சுயாதீனமாக செயற்பட தடங்கல்களை ஏற்படுத்துகின்றன என்ற கருத்து புதிய சட்ட வரைவிற்குப் பின்னர் அற்றுப்போகலாம் என எதிர்பார்க்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு தொடர்பாக கூட்டுறவுத் திணைக்கள-த்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை நிறைவேற்றுவது தொடர்பில் திருப்திகரமான முன்னேற்றம் கிடைத்துள்ளது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதிகாரப் பகிர்வு முதல் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வுகள் உரிய தவணைகளில் நடைபெறுவதில்லை என்ற ஓர்குறை இருந்து வந்தது. கூட்டுறவு சங்கங்களை நிர்வகித்தல் தொடர்பில் ஏற்பட்ட திடீர் மாற்றங்களினால் இத்தகையதோர் நிலை தோன்றுவது நியாயமானதே. சட்ட ஏற்பாடுகளினால் உரித்தாக்கப்பட்ட அத்தகைய பொறுப்பினை நிறைவேற்றும் போது நிர்வாக ரீதியில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களின் விளைவாக தோன்றிய தடைகளை 1995இல் அகற்றிக் கொள்ள முடிந்ததும், நாட்டிலுள்ள அனைத்து சங்கங்களினதும் கணக்காய்வுக் கடமைகள் திருப்திகரமானதோர் நிலையில் நிறுத்தப்பட்டது.

இந்த நாட்டின் கூட்டுறவு இயக்கத்தில் முக்கிய பாத்திரம் வகிக்கும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி சில விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நுகர்ச்சி சேவையளிப்பதற்கும் மேலாக விவசாயப் பிரதேசங்களில் விவசாய உள்ளீடுகளை விநியோகித்தல், விவசாய உற்பத்திகளின் விற்பனை அபிவிருத்தி, பெறுமதி ஏற்படக் கூடிய வகையில் விவசாய உற்பத்திகளை தயாரித்தல், சூழல் பாதுகாப்பு, சமூக அபிவிருத்தி போன்ற மக்கள் வாழ்க்கை வளப்படுத்தும் பாரிய கடமைப் பொறுப்புக்களையும் இவ்வகைச் சங்கங்கள் நிறைவேற்றும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது. இருப்பினும் நாட்டினுள்ள 300 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கடமைகளை மதிப்பீடு செய்கையில் அவைகளில் அனேகமானவை நுகர்ச்சி சேவையளிப்பதொன்றே பிரதானமாகக் கொண்டியங்கியுள்ளன என்பதே பொதுவாகத் தோன்றியது. அத்தகையதோர் கட்டமைப்புனின்றும் நிலைப்படுத்திய அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஒரு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்களே செயற்பட்டிருந்தன. இந்நிலையினை 1994 நிர்வாக அறிக்கையிலும் குறிப்பிட்டிருந்தேன்.

முகாமைத்துவ பலவீனங்களும் கூட்டுறவு சங்கங்களில் அதிகளவில் இடம் பெற்றிருந்தன. நுகர்ச்சி சேவையளித்தலை மாத்திரம் கவனத்தில் கொண்டு பார்ப்பினும் பல்வேறு குறைபாடுகளுடனேயே அதனையும் நடத்திச் செல்கின்றன. உணவுப் பொருட்களின் மொத்த சில்லறை விற்பனையில் நியாய விலையடிப்படையில் தனியார் துறையினருடன் போட்டியிடுமளவுக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் வசதிகள் பெற்றிருந்தும் அவைகளை அவை பயன்படுத்தத் தவறியிருக்கின்றன. இவ்வகைச் சங்கங்கள் கடைப்பிடிக்கும் கொள்வனவுக் கொள்கைகள் பலமற்றவையாகும். சங்கங்கள் ஒன்று சேர்ந்து கூட்டாக கொள்வனவில் ஈடுபடும்போது தொழிற் துறையில் காணப்படும்.பரிமான வியாபார நன்மைகளை அனுபவிக்க கூடியதாய் இருக்கும் என்ற விடயத்தை ஏற்கனவே நான் தெளிவு படுத்தியிருப்பினும் அத்தகையதோர் வேலைத் திட்டத்தில் ஒன்று சேர்ந்திருப்பதற்கான அறிகுறிகள் எதையும் காணமுடியவில்லை. அத்தகைய முறையொன்றினால் போக்குவரத்துச் செலவு, கொள்வனவுச் செலவு, வேறு நிர்வாகச் செலவுகள் போன்றவைகளை குறைத்துக்கொள்ள முடிந்திருக்கும் என்பதுடன் தனியார் துறையினருடன் போட்டிச் சந்தை விலையில் போட்டியிட்டிருக்கலாம். இருப்பினம் அத்தகையதோர் வேலைத் திட்டத்தினை செயற்படுத்த பல்வேறு உள்ளூறை காரணங்கள் அதிக தடைகளை ஏற்படுத்தியிருந்தன.

பலநோக்கு கூட்டுறுவுச் சங்கங்கள் சிறிதளவான தமது சொந்த நிதிப் பலத்துடனேயே செயற்பட்டிருந்ததுடன் வெளி நிதிநிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள் மேலதிகப் பற்று வசதிகளிலேயே அதிகம் செயற்பட்டிருக்கின்றன. அவ்வாறு வெளியார் நிதி நிறுவனங்களில் கட்டுண்டிருப்பதால் அதிகரித்த நிதிச் செலவுகளை சந்திக்க நேரிடுகின்றது. உச்ச முகாமை தத்துவங்களைக் கையாள்வதிலும் திருப்திகரமாக செயற்படுவதிலுமே இத்தகைய பாரதூரமான நிலைகளிலிருந்து தவிர்த்து கொள்ளமுடியும்.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்ச்சி சேவையளித்தல் கடமை இவ்வாறான கஷ்ட நிலைமைக்கு முகம் கொடுத்திருப்பினும் அதன் கிராமிய வங்கிப் பணிகள் சீரான வளர்ச்சிப்போக்கினை காண்பிக்கின்றன கூட்டுறவு கிராமிய வங்கிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஓர் அங்கமாக செயற்படுவது அச்சங்கங்களுக்கோர் உன்னத பலமொன்றாக அமைந்து விடுகின்றது. கிராமிய வங்கிகளின் வாடிக்கையாளர்கள் 40 லட்சத்தை தாண்டியிருப்பதுடன் கிளைகள் 1251க்கும் மேலாக உள்ளது. கிராமியப் பிரிவின் வழமையானதும், வழமைக்கு மாறானதுமான விவசாயம், வீடமைப்பு, மின்சாரம், விவசாயக் காணிக் கொள்வனவு, சுயதொழில் போன்ற அபிவிருத்தி சார்ந்த முயற்சிக்கு கிராமிய வங்கிகள கடன் வழங்குவதால் அவை நாட்டின் அபிவிருத்திக்கு ஓர் சிறப்பிடத்தை வழங்குகின்றன. பழகிய சூழலில் இலகுவான கடன் நிபந்தனைகளில் கடன்வசதி பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மை வங்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கங்களில் ஈடுபடவும், மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும். இத்தகைய வங்கிகள் மக்களிடையே பிரபல்யம் அடையவும் நம்பிக்கையினை வென்றெடுக்கவும் குறைவடையவில்லை.

கூட்டுறவு கிராமிய வங்கி முறையானது நன்கு ஒருக்கணிக்கப்பட்டு மாவட்ட, மாகாண கிராமிய வங்கிகள் தோற்றம் பெற்றதுடன் இவ்வருடத்தில் அவை மேலும் வளர்ச்சி கண்டன. மாவட்ட/மாகாண கிராமிய வங்கிகள், கூட்டுறவு வங்கி முறை முன்னேற்றத்தின் புதிய மைல் கல்லாக அமைந்துவிட்டது. 21ஆம் நூற்றாண்டிற்கு தன்னை தயார்படுத்தும் பணியில் தயாராகிக் கொண்டிருக்கின்றன. கிராமியப் பிரிவின் நிதி நிறுவனமாக கூட்டுறவு கிராமிய வங்கி முறையினை நிலை நிறுத்தும் அபிவிருத்தி வேலைத் திட்டம் மாவட்ட / மாகாண கிராமிய வங்கிகளால் அமைக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் கூட்டுறவு இயக்கம் தொடர்பாக கவனம் செலத்துவோமாயின் விவசாயத்துறையிலேயே கூடிய முன்னேற்றத்திற்கு இடமளிக்கும் வகையில் அமைந்து உள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் வெற்றி கண்டுள்ள இந்தியா போன்ற நாடுகளில் இத்தகையதோர் நிலையினை நாம் அறியமுடியும். இருப்பினும் துரதிஷ்டவசமாக இலங்கையின் கூட்டுறவானது விவசாயத்துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது வெகு குறைவே. பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் கிராமியத் துறையோடு இணைந்து சேவைகள் வழங்குவதற்கு இலக்குகள் திட்டமிடப்பட்டிருப்பினும், கடந்து போன 25 வருட காலப்பகுதியில் இச் சங்கங்களின் செயற்பாடுகளை ஆராய்வோமாயின் எதிர்பார்ப்புக்கள் பயனற்றவைகளாக இருப்பது தெளிவாகும். விவசாய மக்களுக்கு தேவைப்படும் சிறிதளவான கடன் வசதிகள் கொடுத்தது தவிர வேறு பெரிய விவசாய அபிவிருத்தி பணிகளில் பங்களிப்பு செய்தது போதாது என்றே கூறவேண்டும். இந்நாட்டின் கிராமியப் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாக கொண்டமைந்திருப்பதாலும் நாட்டின் மொத்த சனத் தொகையில் 72க்கு கிட்டிய தொகையினர் கிராம மட்டத்தில் பரந்திருப்பதனாலும் விவசாயத்தின் பல்வேறு துறைகளிலும் கூட்டுறவு நிறைவேற்ற வேண்டிய பணிகள் அனேகம் உள்ளன. நெல் வேளாண்மை, மரக்கறி, பழவகை, பயிரிடல், பாலூற்பத்தி பாரம்பரிய மற்ற ஏற்றுமதிப் பொருட்களை பயிரிடல், சேகரித்தல், தானிய வகைகளைப் பயிரிடல், சேகரித்தல், போன்ற செயற்பாடுகளில் ஒரு சில சங்கங்களே தம்மை அமர்த்திக் கொண்டுள்ளது. இத்தகைய கடமைகளை நோக்கமாக் கொண்டு விவசாயப் பிாவுகளில் ஈடுபடும் கூட்டுறவு அமைப்புக்களை விசேடமாக கட்டியெழுப்புவதானது. எதிர்காலத்தில் கூடிய நன்மை தரும்.

சங்கங்களை அவ்வாறான செயற்பாடுகளில் பிரவேசிக்கச் செய்யும் பொருட்டு 1995இல் பல்வேறு முயற்சிகளில் முன்மாதிரியாக சில சங்கங்களுக்கு வழிகாட்டப்பட்டது. வர்த்தக அடிப்படையில் விவசாயம் செய்யும் பிரதேசங்களில் உள்ள விவசாய மக்களுக்கு தேவைப்படும் விவசாய உள்ளீடுகளை வழங்கவும், விளைவுகளை நியாய விலையில் பெறுவதற்கும், பொருத்தமான வேளைகளில் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கவும், சில சங்கங்கள் ஈடுபடுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையில் விதை நெல் உற்பத்தித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டதுடன் இதில் வடமத்தி, தெற்கு, வடமேல், மத்திய ஆகிய மாகாணங்களைச் சேர்ந்த 10 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இத்திட்டத்தில் சேர்ந்து கொண்டன. பளுகஸ்தமன, திபுலாகல, ஹசலக, திஸ்ஸமகராம, ஹசங்கம, கல்நாவ, ராஜாங்கன, நிகவெரடிய, பொல்பிதிகம, நாவுல, ஆகிய சங்கங்கள் இத்திட்டத்தில் நல்ல பெறுபேறுகளை அடைந்தன. இதே விதமாக தபுள்ளை பிரதேசத்தில் பெரிய வெங்காயச் செய்கைக்கு உதவிகள் வழங்கப்பட்டு அத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தினை தபுள்ளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் செயற்படுத்தியது. இத்திட்டம் விதை வெங்காயம், உற்பத்தி செய்யும் அளவுக்கு வளர்ச்சி கண்டது.

இது தொன்னந்தோட்ட உரிமையாளர்களுக்கும் சிறு தோட்ட இறப்பர் சொந்தக் காரர்களுக்குமாக தென்னை அபிவிருத்திச் சபையினதும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினதும் தொழில்நுட்ப ஆலோசனை சேவை உதவியுடன் தொடங்கப்பட்ட இத்திட்டத்தினால் சிறந்த பெறுபேறுகள் கிடைத்தன. ச.தொ.ச. நிறுவனத்துடன் இணைந்து பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், வேறு தேசிய வர்த்தகப் பயிர்களின் விளைவுகளைக் கொள்வனவு செய்யும் முறை அமுல்படுத்தப்பட்டதுடன் விவசாயிகள் தமது விளைவுகளுக்கு நியாயமான விலையினைப் பெற்றுக் கொள்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப கூட்டுறவு சங்கங்களை தேசிய பொருளாதரத்தின் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபடுத்தும் போது தேசிய மட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கடமைகள் மிகப் பரந்துபட்டவையாகும். விஷேடமாக விவசாய நடவடிக்கைகளுக்காக தோற்றம் பெற்ற இலங்கை கூட்டுறவு சந்தைப்படுத்தற் சமாசத்தின் கடமைகளை இதன் பொருட்டு மீள அமைத்துக் கொள்ளும் பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை, நுகர்ச்சி சமாசம் இலங்கை கூட்டுறவு கைத்தொழில் சமாசம், தென்னை உறபத்தியாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், ஆகியன மீளாய்வு செய்யும் வ'ருடத்தில் தமது நோக்கத்தினை அடைந்து கொள்ள குறிப்பிடத்தக்க வழி வகைகளைக் கையாண்டுள்ளன.

நுகர்ச்சிக் கூட்டுறவுச் சமாசம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் பணியில் உள்ளாகியிருப்பதுடன் கைத்தொழிற் சமாசம் உயர் தரத்திலான உற்பத்திகளினால் சந்தையில் சிறப்பிடம் பெற்றுள்ளது. தென்னை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் ஏற்றுமதி வர்த்தகத்தில் விஷேட கவனத்தை திருப்பி அமைக்கப்பட வேண்டியுள்ளது.

இலங்கையின் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சம்மேளனம் கிராம மட்டத்தில் கடனுதவு சங்கங்களை முன்னேற்றும் தனது கொள்கையில் வெற்றி பெற்றுள்ளது. விஷேடமாக கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக வங்கியொன்றை ஏற்படுத்தும் பணியில் முயற்சிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டுள்ளது.

இலங்கை தேசிய கூட்டுறவு சபை பொதுவில் மொத்தக் கூட்டுறவு இயக்கத்திடமும் உள்ள குறைபாடுகளை இனம் கண்டு கல்வி விரிவாக்கச் செயல்கள் மூலம் முன்னணியில் கடமைகளை ஆற்றியுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

உரிய வருடத்தின் கூட்டுறவுத் துறையின் செயற்பாடுகளை முன்னேற்றிக் கொள்வதற்காக கௌரவ அமைச்சர் அவர்களுடையதும் பிரதி அமைச்சர் அவர்களுடையதும் வழிகாட்டுதலின் பேரில் கிடைத்த உதவிகளுக்கு மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு விடயம் தொடர்பாக மாகாண கூட்டுறவு அமைச்சர் அவர்களுடைய உதவிகளையும் பாராட்டுகின்றேன். அமைச்சின் செயலாளர், மேலதிகச் செயலாளர், சிரேஷ்ட செயலாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் திணைக்கள அலுவல் தொடர்பாக கிடைத்த ஆலோசனைகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் மிகுந்த நன்றியுடையோனாவேன். மாகாண கூட்டுறவு தொடர்பான விடயங்களில் அனைத்து மாகாண அமைச்சின் செயலர்களினதும் ஒத்துளைப்புக்கள் குறைவின்றிக் கிடைத்தன. மாகாண மட்டத்தில் கூட்டுறவு நடவடிக்கைகளை திறம்பட நிறைவேற்ற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து மாகாண ஆணையாளர்களுக்கும் இவ்விடத்தில் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் திணைக்களத்தின் செயற்பாடுகளை திட்டமிடும் போதும், செயற்படுத்தும் போதும் இயக்கும் போதும் அயராது உழைத்த அனைத்து பிரதி ஆணையாளர்களுக்கும் சிரேஸ்ட உதவி ஆணையாளர்களுக்கும், உதவி ஆணையாளர்களுக்கும் பிற அதிகாரிகளுக்கும் எனது நன்றிகள். அவ்வாறே புதிய செயற்பாடுகளை நிறைவேற்றும் போது பல்வேறு கடமைகளை துரிதமாக நிறைவேற்றிக்கொள்ளும் போது கூட்டுறவுத் திணைக்களத்துடன் கைகோர்த்துச் செயற்பட்ட கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அனைத்து கூட்டுறவாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜீ. ஹெட்டியாரச்சி**

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்


கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுத் திணைக்களத்தின் அமைப்பு

இணைப்பு - 01






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995 ஆண்டிற்குள் திணைக்களத்தின் தலைமை காரியாலத்திலும் இலங்கை கூட்டுறவு கல்லூரிக்கும் மாகாண ஆணையாளர்களின் அலுவலகங்களுக்கும் இணைக்கப்பட்ட ஆளணித் தொகை

இணைப்பு - 02

| | தலைமை அலுவலகம் | மேல் மாகாணம் | மத்திய மாகாணம் | தென் மாகாணம் | வடகிழக்கு மாகாணம் | வடமேற்கு மாகாணம் | ஊவா மாகாணம் | வடமத்திய மாகாணம் | சப்பிரகமுவ மாகாணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கூட்டுறவு அபிவிருத்தி ஆ/பதி. | 01 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 01 |
| மாகாண கூட்டு. ஆணையாளர் | ...... | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 08 |
| பிரதி ஆணையாளர். | 03 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 03 |
| சிரேஷ்ட உதவி ஆணையாளர் | 02 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 01 | ...... | 03 |
| உதவி ஆணையாளர் | 07 | 05 | 03 | 01 | 01 | 02 | 02 | 04 | 01 | 26 |
| கணக்காளர் | 01 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 01 |
| நிர்வாக அலுவலகர் | ...... | ...... | ...... | ...... | ...... | 01 | ...... | ...... | ...... | 01 |
| மாவட்ட அலுவலகர் | 05 | 04 | 03 | 03 | 17 | 06 | 02 | ...... | ...... | 40 |
| கூட்டுறவுச் சங்க பரிசோதகர் | 29 | 229 | 160 | 158 | 243 | 153 | 104 | 75 | 108 | 1259 |
| போதனாசிரியர் | 08 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 08 |
| நூல் நிலைய அலுவலர் | 01 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 01 |
| லிகிதர்களும் சமாந்தர தரங்களும் | 45 | 19 | 29 | 11 | 47 | 24 | 12 | 11 | 08 | 206 |
| வதிவிட பொறுப்பாளர் | 01 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 01 |
| கேட்டல் காண்டல் உதவியாளர் | 01 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 01 |
| சாரதி | 07 | 04 | 04 | 03 | 07 | 03 | 02 | 02 | 01 | 33 |
| சமயற்காரர், போசனசாலை சேவகர் | 06 | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | 06 |
| கா.கா.ச. உம் சமாந்தர தரங்களும் | 25 | 03 | 04 | 04 | 29 | 07 | 04 | 02 | 02 | 80 |
| மொழிபெயர்ப்பாளர் | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... | ...... |
| மொத்தம் | 142 | 265 | 204 | 181 | 345 | 197 | 127 | 96 | 121 | 1678 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக பதிவு பெற்றுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் - 1995 இணைப்பு - 03

| சங்கவகை | மேல் | மத்தி | தெற்கு | வ.கிழ | வ.மே | வ.ம. | ஊவ | சபர | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. ப.நோ.கூ.ச. | | 01 | | | | | | | 01 |
| 2. ச.ண.ச | 22 | 05 | 38 | 132 | 26 | 6 | 51 | 11 | 291 |
| 3. இறப்பர் | 4 | | 8 | | 01 | | | 01 | 14 |
| 4. தெங்கு | 1 | | 5 | | | | 1 | | 07 |
| 5. விவசாயம் | | 1 | | | 9 | | | 03 | 13 |
| 6. பால் | | 4 | | | | | 03 | | 07 |
| 7. தோட்ட தொழிலாளர் | | 1 | | | | | | 01 | 01 |
| 8. கால்நடை வளர்ப்பு | 1 | | | 1 | | | | | 02 |
| 9. கைத்தொழில் | 2 | | 4 | 3 | | | | | 08 |
| 10. நிர்மாணம் | 2 | | | | | | | | 02 |
| 11. கருங்கல் உடைத்தல் | | | | | | | | | 02 |
| 12. பொதி செய்தல் | 1 | | | | | | | | 01 |
| 13. சுயசக்தி அடிப்படை | | | | | 38 | | | | 38 |
| 14. புடவை | | | | | | | 01 | | 01 |
| 15. வீடமைப்பு | | | | | | | 02 | | 02 |
| 16. பாடசாலை | | | | | | 01 | | | 01 |
| 17. விடுமுறை வருதி | | | | | | | 01 | | 01 |
| 18. அபிவிருத்தி | 1 | | | | | | | | 01 |
| 19. ஆசிரியர்கள் | 1 | | | | | | | | 01 |
| 20. ஆயுர்வேத | 3 | | | | | | | 01 | 04 |
| 21. மீன்பிடி | | | 1 | 43 | 05 | 01 | | | 50 |
| 22.மத்திய நடுத்தர கைத்தொழில் | 1 | | | | | | | | 01 |
| 23. உல்லாச மீன்பிடி | 1 | | | | | | | | 01 |
| 24. வேறு | | 1 | 3 | 15 | 02 | | | | 21 |
| மொத்தம் | 40 | 13 | 59 | 194 | 81 | 08 | 59 | 17 | 471 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் 1991-1995 இணைப்பு - 04

| சங்க வகை | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 |
|---|---|---|---|---|---|
| 1. பலநோக்கு | 289 | 292 | 300 | 300 | 300 |
| 2. சிக்கன கடனுதவி (ச.ன.ச) | 6763 | 6940 | 7510 | 7681 | 8035 |
| 3.தேயிலை, இறப்பர் தெங்கு | 86 | 86 | 68 | 84 | 109 |
| 4. பாலுற்பத்தியாளர் | 226 | 230 | 253 | 263 | 265 |
| 5. மிருக வளர்ப்பு | 55 | 56 | 37 | 20 | 37 |
| 6. வேறு விவசாயம் | 109 | 206 | 229 | 252 | 218 |
| 7. பிடவை | 26 | 29 | 29 | 29 | 25 |
| 8. மீன்பிடி | 844 | 845 | 769 | 731 | 740 |
| 9. சிறுகைத்தொழில் | 337 | 344 | 336 | 320 | 241 |
| 10. பாடசாலை | 1399 | 1456 | 1450 | 1387 | 1345 |
| 11. வைத்தியசாலை | 7 | 7 | 7 | 7 | 5 |
| 12. தொழிலாளர் | 64 | 64 | 36 | 40 | 23 |
| 13. மாவட்ட இளைஞர் சேவை | 25 | 25 | 25 | 25 | 17 |
| 14. வேறு | 439 | 384 | 929 | 887 | 902 |
| 15. மொத்தம் | 10669 | 10964 | 11978 | 12026 | 12262 |
| 16. வளர்ச்சி (1991-100) | | 102.77 | 112.27 | 112.72 | 114.93 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ம் ஆண்டில் சுத்தமான போஷாக்குள்ள அரிசி உற்பத்தி செய்யும் திட்டம் இணைப்பு - 05

| வருடம் | திட்டம் செயற்படுத்தும் கூட்டுறவுச்சங்கம் | திட்டம் செயற்படுத்தும் கிராமங்கள் | திட்டப் பெறுநர்கள் | சங்கத்துக்கு விநியோகித்த அரிசி | திட்டப் பெறுநர்களுக்கு சங்கம் வழங்கிய பணம் | நடைமுறைப் படுத்தப்படும் அரிசி ஆலைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1991 | 42 | 325 | 2,884 | 12,89,816 | 1, 81, 73, 768 | ........ |
| 1992 | 58 | 650 | 5,143 | 68,80,342 | 9, 54, 03, 028 | 27 |
| 1993 | 72 | 840 | 5,831 | 132,34,605 | 19, 32, 40, 093 | 70 |
| 1994 | 85 | 957 | 6,056 | 148,70,569 | 21, 55, 66, 655 | 95 |
| 1995 | 89 | 1005 | 7,292 | 171,49,133 | 24, 62, 05, 372 | 109 |
| 94/95 அதிகரிப்பு | 04 | 48 | 1236 | 22,78,564 | 3, 06, 38, 717 | 14 |
| வீதம் % | 4.7 | 5.0 | 20.4 | 15.3 | 14.2 | 14.7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப.நோ.கூ சங்க வியாபார கூறுகள் (மாகாணரீதியில்) 1995 இணைப்பு - 06

| விபரம் | இலங்கை | மேல் | மத்தி | தெற்கு | வட/கிழக் | வட/மேற்கு | வட/மத்தி | ஊவா | சபரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப.நோ.கூ சங்கம் | 300 | 38 | 41 | 34 | 87 | 32 | 28 | 17 | 23 |
| மொத்த களஞ்சியம் | 651 | 176 | 75 | 82 | 110 | 60 | 43 | 38 | 67 |
| சில்லறைக் கிளைகள் | 7306 | 1386 | 844 | 1049 | 1276 | 981 | 454 | 451 | 865 |
| சுயசேவை வி..சாலை | 102 | 29 | 8 | 21 | 7 | | 18 | 4 | 15 |
| பாடசாலை கிளைகள் | 16 | 0 | 0 | 0 | 0 | | 0 | 1 | 15 |
| தோட்ட விற்சாலைகள் | 40 | 0 | 40 | 0 | 0 | | 0 | 0 | 0 |
| வேறு விற்சாலைகள் | 432 | 110 | 47 | 41 | 18 | 113 | 25 | 44 | 34 |
| சனசக்தி சுய தொழில் வி.சாலை | 36 | 0 | 0 | 0 | 0 | 0 | 9 | 9 | 18 |
| கொள்வனவு நிலையங்கள் | 48 | 0 | 0 | 26 | 0 | 22 | 0 | 0 | 0 |
| எரி பொருள் நிரப்பு நிலையம் | 224 | 41 | 29 | 11 | 56 | 27 | 14 | 14 | 32 |
| கிராமிய வங்கிகள் | 1251 | 314 | 156 | 206 | 83 | 209 | 61 | 79 | 143 |
| அரிசி ஆலைகள் | 93 | 3 | 3 | 3 | 23 | 13 | 35 | 6 | 7 |
| அச்சகம் | 23 | 1 | 1 | 5 | 2 | 6 | 1 | 2 | 5 |
| பேக்கரி | 38 | 10 | 0 | 0 | 7 | 0 | 1 | 9 | 11 |
| ஆஸ்பத்திரி | 2 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| சிகை அலங்கார நிலையம் | 4 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 |
| சினிமா அரங்கு | 2 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 |
| முகவர் தபாற்கந்தோர் | 14 | 0 | 0 | 1 | 0 | 12 | 0 | 1 | 0 |
| பாலர் பாடசாலை | 70 | 2 | 3 | 0 | 2 | 0 | 18 | 0 | 45 |
| கராஜ் | 7 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 4 |
| பார்மசி | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| தையல் நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| புகைப்படப் பிரதி | 8 | 0 | 0 | 0 | 0 | 8 | 0 | 0 | 0 |
| முகவர் காஸ் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| பொதி செய்தல் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| பக்கட் அடைத்தல் பிரிவு | 34 | 0 | 0 | 0 | 0 | 25 | 0 | 9 | 0 |
| லொறி | 870 | 171 | 133 | 98 | 148 | 102 | 72 | 53 | 93 |
| வான் | 108 | 45 | 0 | 15 | 0 | 17 | 6 | 5 | 20 |
| டிராக்டர் | 103 | 25 | 0 | 18 | 0 | 16 | 7 | 18 | 18 |
| பஸ் | 3 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 0 | 0 |
| பவுசர் | 14 | 0 | 0 | 0 | 0 | 14 | 0 | 0 | 0 |
| வேறுவாகனங்கள் | 141 | 0 | 29 | 28 | 33 | 16 | 5 | 12 | 18 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விபரம் | நுகர்வுப் பிரிவு | கிராமிய பிரிவு | போக்குவரத்து பிரிவு | விவசாய பிரிவு | வேறு பிரிவுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை சுழற்சி | 20705.4 | 638 | 301.6 | 442.2 | 2521.5 | 24608.7 |
| கழிக்க ஆகுசெலவு | 19855.0 | 0 | 159.7 | 404.2 | 2282.5 | 22701.4 |
| மொத்த மேலதிகம் | 850.4 | 638 | 141.9 | 38 | 239 | 1907.3 |
| நானாவித வருமானம் | 225.6 | 344 | 0 | 20 | 27.3 | 616.9 |
| மொத்த வருமானம் | 1076 | 982 | 141.9 | 58 | 266.3 | 2524.2 |
| இயக்கும் செலவு | 646 | 504 | 89.3 | 15.6 | 112.7 | 1367.6 |
| நிதிச் செலவு | 142 | 29 | 27.6 | 5.7 | 10.4 | 214.7 |
| பெறுமானத் தேய்வு | 23.9 | 6 | 44.1 | 1.9 | 4.7 | 80.6 |
| வேறு செலவுகள் | 32.2 | 265 | 0 | 8.7 | 17 | 322.9 |
| செலவுகள் மொத்தம் | 844.1 | 804 | 161 | 31.9 | 144.8 | 1985.8 |
| பகுதி மேலதிகம் / குறைவு | 231.9 | 178 | -19.1 | 26.1 | 121.5 | 538.4 |
| பொதுநிர்வாக செலவு | | | | | | 351.7 |
| தேறிய இலாபம் | | | | | | 186.7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு - 08

## வெளிநாட்டு புலமைப் பரிசில் மாநாடுகளும் பயிற்சி பாட நெறிகளில் பங்குபற்றுவதற்காக வெளிநாடு சென்ற அதிகாரிகள். 1995ல்

| பெயர் | பதவி | காலப்பகுதி | | நாடு | துறை |
|---|---|---|---|---|---|
| ஜே. எம். செனவிரட்ன | கூ.ச.பரி. 1 | 95.1.31 | 95.2.4 | இந்தியா | கூட்டுறவு விவசாய தயாரிப்பு பணி அபிவிருத்தி |
| யூ. ஆர். செனவிரட்ன | இ.நிர்.சே 11/1 | 95.2.24 | 95.3.4 | வியட்நாம் | கூட்டுறவு தொழில்சார் முறை பற்றிய பயிற்சி |
| யூ. ஆர். செனவிரட்ன | இ.நிர்.சே.11/1 | 95.3.20 | 95.3.24 | இந்தியா | ஆசிய கூ/வு பயிற்சி கல்/அதிபர்களின் சம்மேளனம் |
| கே. ரணவீர | கூ.ச.பரி | 95.10.4 | 95.12.26 | மலேஷியா | பயிற்றுவோரைப் பயிற்றுவித்தல் |
| எச். சிரிபால | விரிவுரையாளர் | | | | |
| விமல் விஜேசேகர | விரிவுரையாளர் | 95.7.17 | 95.7.22 | இந்தியா | தொழில்நுட்ப முறைசார் அபிவிருத்தி பயிற்சி |
| ஜி. ஹெட்டியாராச்சி | இ.நிர்.சே 1 | 95.9.4 | 95.9.7 | பங்கொக் | ஆ/பசுபிக் வலய விவசாய கூ/வு அ/விக்கான வலய அமைப்பு 2வது மாநாடு |
| ஏ. பி. புளத்கம | கூ.ச.பரி (விரிவு) | 95.8.7 | 95.8.19 | இந்தியா | கூ/வு முகா/த்துவ ஆலோசகர்களின் பயிற்சி |
| டி. பி. நா. நாணயக்கார | கூ.அ.நிர்.உத்தி | 95.11.8 | 95.11.17 | இந்தியா | வி/கிராமிய அ/வி நிதி நிறுவ/முகமைத்துவம் தொடர்பான இணைந்த பிரவேசம் |
| யூ. ஆர். செனவிரட்ன | இ.நிர்.சே 11/1 | 95.11.20 | 95.11.23 | இந்தியா | சர்வதேச கூட்டுறவு சம்மேளனத்தின் 8வது ஆசிய பசுபிக் மனித வள அபிவிருத்தி மாநாடு |
| டி. எம். யூ. சி. திசாநாயக | கணக்காளர்11/1 | 95.12.8 | 95.12.24 | இந்தியா | அரச நிதி முகாமை டிப்ளோமா பாடநெறிகளில் பங்கு பெறுபவர்களின் கல்விச் சுற்றுலா |
| ஏ.டப். ராமனாயக | கூ.ச.பரி 1. | 95.10.4 | 95.12.26 | இந்தியா | கூட்டுறவுக் கணக்காய்வு டிப்ளோமா பயிற்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by : Sri Lanka Printers' Co-operative Society Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org